₹10

fmpb

# அறைகூவல்

Volume 53 | Issue 2 | February 2023

## பரிசுத்தத்திற்கான தெரிந்தெடுப்பு




தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,...

– எபேசியர் 1:4



# ஆரம்ப வரிகள்...

## கர்த்தருக்குப் பரிசுத்தம்

வட ஐரோப்பிய மற்றும் ஆசிய காடுகளில் 'எர்மைன்' என்ற ஒருவிதமான விலங்குவகை வாழ்கின்றது. அவை பனிக்காலங்களில் சுத்தமான வெண்மை நிறத்தில் மாறி, தங்கள்மீது அழுக்கேதும் படியாமல் காக்கவும் செய்கின்றது. இவைகளை அதின் ரோமத்திற்காக வேட்டையாடும் வேடர்கள் பொறிகளை வைத்துப் பிடிக்காமல், அது தங்கும் புதர் மற்றும் குழிகளின் நுழைவாயிலை அசுத்தமான குவியல்களால் நிரப்புவார்கள். அதன்பின் வேட்டை நாய்களைக் கொண்டு அந்த எர்மைன்களைத் துரத்துவார்கள். உடனே அந்த விலங்கு பயத்தில் அதன் புதரை நோக்கி ஓடும். ஆனால், அங்கு நுழைவாயிலில் அசுத்தம் குவிந்திருப்பதால் அது உள்ளே நுழைவதைத் தவிர்க்கும். ஏனெனில், அது தன் சுத்தமான ரோமத்தில் அழுக்குப்படிவதை விட, அந்த நாய்களிடத்தில் சிக்கிக்கொள்வதையே தெரிந்துகொள்ளும். எபிரெய மொழியில் பரிசுத்தத்திற்கு 'காடேஷ்' என்பதாகும். அதாவது, 'பிரித்தெடுக்கப்பட்டது அல்லது துண்டிக்கப்பட்டது' என்று பொருளாகும். தேவன் நம்மைப் பரிசுத்தத்திற்காக **தெரிந்துகொள்கிறார்** (எபே.1:4) மற்றும் **பிரித்தெடுக்கிறார்** (லேவி.20:26). எனவே, பரிசுத்தத்திற்கான அழைப்பு என்பது பிரித்தெடுக்கப்பட்ட வாழ்வு வாழவும், மேன்மையான மற்றும் விசேஷித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவதற்குமாகும். தேவன் இந்த பரிசுத்த வாழ்வை வாழ தனி நபர்கள், குடும்பங்கள் மற்றும் தேசத்தையும் தெரிந்தெடுக்கிறார். இவ்வாறு தேவன் நம்மைப் பரிசுத்தத்திற்கென்று தெரிந்துகொள்ளும்போது, மேலே சொல்லப்பட்டுள்ள எர்மைன்களைப் போல 'ஜீவனே போனாலும் பரிசுத்தத்திலிருந்து தவற மாட்டேன்' என்ற வைராக்கியத்தை அவர் நம்மில் எதிர்பார்க்கிறார். அதற்காகவே அவர் நம்மைத் தெரிந்தெடுத்து பிரித்தெடுக்கிறார். இன்று நம்மிடையே இந்த பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள வைராக்கியத்தோடு நின்று போராடிய தனி நபராகிய யோசேப்பும் (ஆதி.39:1-20), தேவனே சாட்சிக்கொடுத்த குடும்பமாகிய ரேகாபியரின் குடும்பமும் (எரே.35:1-19) மற்றும் தேவன் இஸ்ரவேலரைப் பரிசுத்தத் திற்காக தெரிந்தெடுத்திருந்தபோதும் (உபா.7:6; எண்.22-25) பிலேயாமின் தந்திரமான சொற்களால் இஸ்ரவேலர் மத்தியில் பரிசுத்த குலைச்சல் ஏற்பட்டபோது, தேசத்தின் பரிசுத்தத்தைக் காக்கும்படி வைராக்கியம் கொண்ட பினெகாசும் தேவை. இதுபோலவே, 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' என்பதையும் முதலில் என்னிலும், பின்பு என் குடும்பத்திலும், அதன்பின் என் தேசத்திலும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். இவ்வாறு பரிசுத்தத்தில் வைராக்கியம் கொள்ளும் நபர்களையே தேவன் தெரிந்துகொண்டு, பிரித்தெடுத்து பயன்படுத்துவார். அவர் கரத்தில் அன்றாடகம் பயன்படுத்தப்படும் பரிசுத்தமான பாத்திரமாக விளங்கிட கர்த்தர்தாமே நமக்கு உதவி செய்வாராக!

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாய் இருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்.**

*– லேவியராகமம் 20:26*

**நாம் தேவனின் பரிசுத்தத்தைப் புரிந்துகொண்டால் மட்டுமே, நம்முடைய பாவத்தின் ஆழத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.**

*– பில்லி கிரஹாம்*

**யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.**

*– எபிரெயர் 12:14*

**தேவ அற்புதங்களில் மிகப்பெரிய அற்புதம் யாதெனில், ஒரு அசுத்தமான மனிதனை அசுத்தமான உலகத்திலிருந்து பிரித்தெடுத்து பரிசுத்தமாக்கி, அவனை மறுபடியும் அசுத்தமான உலகத்தில் வைத்து, கறைபடாமல் பரிசுத்தமாய் பாதுகாப்பதுவே.**

*– லியோனார்டு ரேவன் ஹில்*


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

# பொதுச்செயலாளரிடமிருந்து...



இயேசுகிறிஸ்துவை ஒருமுறைகூட அறியாத இந்தியரனைவரும் அவரை அறிந்திடச் செய்யும் உன்னதப்பணியில் எங்கள் உடன் பங்காளிகளுக்கு, சர்வ வல்ல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பின் நல்வாழ்த்துக்கள்!

“அவர் (இயேசு) ஓய்வுநாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர்பேரில் குற்றஞ் சாட்டலாமென்று அவர்மேல் நோக்க மாயிருந்தார்கள். அப்பொழுது அவர் சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி: எழுந்து நடுவே நில் என்று சொல்லி;...” – (மாற்.3: 2 & 3) என்ற இப்பகுதி பூமியில் வாழ்ந்த இயேசுவுடைய வாழ்க்கையின் ஓர் முக்கிய அம்சத்தை எடுத்துரைக்கிறது.

சூம்பின கையையுடைய மனுஷன் அமர்ந் திருந்த ஜெப ஆலயத்திற்குள் இயேசு பிரவேசித்தார். இயேசு அந்த மனுஷனைச் சுகமாக்கினால், அவர் ஓய்வுநாளின் சட்டத்தை மீறிவிட்டார் என்று எதாவதொரு காரணத்தை அவர்மீது கண்டுப்பிடித்து, அவரைக் குற்றப்படுத்துவதற்கு அங்குள்ள ஜனங்கள் தீவிரமாய் காத்திருக்கிறார்கள் என்பது இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். அவர் தம்மீது வரப்போகும் குற்றச்சாட்டைத் தவிர்க்கும்பொருட்டு, அந்த மனுஷனைச் சுகப்படுத்துவதற்கு அவருக்கு வேறு வழிவகைகளும் இருந்தன. அதிலொன்று, இயேசு அந்த மனுஷனை ஓய்வுநாளின் கட்டுப்பாட்டு நேரத்திற்குப் பின்பு சுகமாக்கி யிருந்தால், அவரைக் குற்றப்படுத்த வேண்டுமென காத்திருக்கும் மக்களுக்கு அவருக்கு விரோதமாய் குற்றஞ்சாட்டுவதற்கு காரணம் ஒன்றுமே கிடைக்காமல்கூட போயிருக்கலாம். ஆனால், இயேசு எப்பொழுதுமே தமது பிதாவையே சார்ந்தி ருந்ததால், தம்மீது குற்றஞ்சாட்டப்படாமல் காப்பாற்றிக்கொள்ள அவர் எவ்வகை யுக்தியையும் கையாளவில்லை. அப்பகுதி யிலுள்ள 6-ம் வசனத்தில் ‘‘உடனே பரிசேயர் புறப்பட்டுப்போய், அவரைக் கொலைசெய்யும்படி, அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடேகூட ஆலோசனை பண்ணினார்கள்” என்று குறிப்பிட்டுள்ளபடி, இயேசு தம்மைக் கொலை செய்வதற்கு அவர்கள் சதி திட்டமிடுவார்கள் என்பதை நன்கறிந்தே அவனைச் சுகமாக்கினார். இதைப்போல நாமும் உள்ளும் புறமும் அச்சுறுத்தல்களைச் சந்திக்கும்போது, நமது பிதாவாகிய தேவனின் பார்வையில் சரியானதை ஜெபத்துடனும் உறுதியுடனும் செய்ய வேண்டும். மேலும் இவ்வாறு நமது தேசத்தில் தேவையோடிருக்கும் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷத்தைத் துணிவுடன் எடுத்துரைக்கவே, சேனை களின் கர்த்தரால் நாம் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளோம்.

**தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களுக்கு விஜயம்:** கிறிஸ்து பிறப்புப் பண்டிகைக்குப் பின், டிச.27 முதல் 30-ம் தேதிகள் வரை தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களான தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலிக்கு சென்ற போது, அங்கு திரளான ஜெபக்குழுத் தலைவர்களையும், ஓய்வுப்பெற்ற மிஷனரி களையும் சந்தித்தேன். அதுமட்டுமல்லாது, அங்கு நடத்தப்பட்ட தலைவர்கள் கூடுகை களிலும், சபைக்கூடுகைகளிலும் பங்கெடுத்தேன்.

**கேள்வியினால் வரும் விசுவாசம் (FCBH) என்ற இயக்கத்தின் தலைவர் களுடன் சந்திப்பு:** இவ்வியக்கம் வேதாகமத்தை ஒலிப்பதிவு செய்து,

அந்த ஒலி சாதனங்களைத் திருச்சபைக் குழுக்களுக்கும் புதிய விசுவாசிகளுக்கும் கொடுக்கும் ஊழியப்பணியினைச் செய்து வருகிறது. இவ்வியக்கத் தலைவர்கள் நமது தலைமையகத்திற்கு வருகை தந்தபோது, ஊழியத்தை மேம்படுத்துவதற்கு கூட்டு ஒப்பந்தம் செய்வது குறித்த பயனுள்ள சந்திப்பை நடத்தினோம்.

**திரு. பால்துரைசாமி பொற்பாதம் அவர்களின் மறைவு:** திரு. பால் துரைசாமி அண்ணன் அவர்கள் நீண்ட காலமாக நமது FMPB இயக்கத்தின் தீவிர தலைவராக இருந்ததோடு, நமது இயக்கத்தின் தரிசனத்தை தமிழ்நாடு முழுவதும் பரப்பும் பணியைச் சிறப்புறச் செய்தார். இவர் கடந்த 06.01.2023 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். கிறிஸ்துவின் மாபெரும் செயல்வீரரொருவர் கிறிஸ்துவோடு இருக்க சென்றுவிட்டார். அண்ணனின் சொந்த ஊரான தமிழ்நாட்டின் தென்காசி மாவட்டத்திலுள்ள மடத்தூரில் வைத்து நடைபெற்ற அவருடைய அடக்க ஆராதனையில் நான் கலந்துகொண்டு, இறுதியாக எனது அன்பின் மரியாதையை அவருக்குச் செலுத்தி வந்தேன்.

**இளைஞர் முகாம் பொன்விழா:** நமது ஊழியப்பாதையில் இளைஞர் பிரிவு தனது 50 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பதை நினைவுகூரும் வகையில் இளைஞர் முகாமொன்றை நாசரேத்தில் வைத்து ஜனவரி 14 முதல் 16-ம் தேதிகள் வரை நடத்த ஏற்பாடு செய்து நடத்தினோம். அம்முகாமில் மொத்தம் 1040 பேர்கள் பங்கேற்றனர். கூட்டத்தை ஒழுங்குச்செய்த குழுவினரும் ஜெபக்குழுத்தலைவர்களும் இதை ஆசீர்வாதமான கூட்டமாக நடத்தி முடிக்க, அனைத்து ஏற்பாடுகளையும் செய்து ஏராளமான வாலிபப்பிள்ளைகளை இக்கூட்டத்திற்கு அழைத்து வந்திருந்தனர். அநேக வாலிபர்கள் இயேசுவுக்குள் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டனர். பலர் இயேசுவின்மீது கொண்டுள்ள அன்பினிமித்தம் சுவிசேஷத்தை எடுத்துரைக்கும் ஊழியத்தைச் செய்ய மனதார அர்ப்பணித்தனர்.

## பிப்ரவரியில் நடக்கவிருக்கும் முக்கிய கூடுகைகளும், நிகழ்ச்சிகளும்:

**நிதி நிர்வாகக்குழு -** இக்குழுக்கூட்டம் சென்னையில் வைத்து பிப்.4-ம் தேதி நடக்கவிருக்கிறது. இக்கூட்டத்தில் 2023-2024-ம் வருட நிதியாண்டின் வரவு செலவு பட்டியல் ஆய்வு செய்யப்பட்டு, செயற்குழுவின் ஒப்புதலுக்குப் பரிந்துரைக்கப்படும்.

**நிர்வாகக்குழு -** இக்குழுக்கூட்டம் பிப்.4-ம் தேதி மாலை முதல் 5-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. தயைக்கூர்ந்து இக்கூட்டத்தின் ஆயத்தப்பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**நேர் காணல் -** மிஷனரிகளைத் தெரிவு செய்யும் நேர்காணல் நிகழ்ச்சி சென்னையிலுள்ள நமது இயக்க தலைமையகத்தில் வைத்து பிப்.6 & 7-ம் தேதிகளில் நடைபெறவிருக்கின்றது. அறுவடை நாயகரான கர்த்தர் தமது அறுவடை களத்திற்கு அநேக பணியாட்களை அனுப்பித்தரும்படியும், நேர்காணலுக்கு வர இருப்போரின் பிரயாணப் பாதுகாப்பிற்காகவும், சரியான நபர்களை மிஷனரிகளாகத் தெரிந்தெடுப்பதற்கு தேவையான தேவ வழிநடத்துதல் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

**தேசிய திட்டக்கூடுகை - 2023 -** நமது FMPB ஊழியத்திற்காக ஜெபிக்கவும், திட்டமிடவும் இவ்வருட இத்திட்டக்கூடுகை சென்னையில் வைத்து பிப்.11 & 12-ம் தேதிகளில் நடக்கவிருக்கின்றது. இதில் நமது ஜெபக்குழுத்தலைவர்களும், மிஷனரிகளும் பங்குப்பெற அழைக்கப்பட்டுள்ளனர். இக்கூடுகை சிறப்பாக நடைபெற ஜெபியுங்கள்.

**செயற்குழு கூட்டம் -** தேசிய திட்டக்கூடுகையைத் தொடர்ந்து, செயற்குழுக் கூட்டம் பிப்.12-ம் தேதி மதியம் முதல் 13-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதற்கு

தங்களது ஜெபங்கள் மிக அவசியமாக இருக்கிறது.

**பிராந்திய செயலர்களின் கூட்டம் –** நமது பணித்தள பிராந்திய செயலர்களின் கூட்டம் பிப்.14 & 15-ம் தேதிகளில் சென்னையில் வைத்து நடைபெறவுள்ளது. தேசத்தின் பல் வேறு மாநிலங்களில் சுவிசேஷத்திற்கு கடும் எதிர்ப்பு நிலவிவரும் இச்சூழலில் இக்கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், குறிப்பிடத்தக்கதாகவும் மாறியிருக்கிறது.

**குஜராத், ஜாவ்டா - தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளியின் வெள்ளி விழா –** இப்பள்ளி கடந்த 25 ஆண்டுகளாக கல்வி மூலம் அங்குள்ள சமுதாயத்திற்கு நற்பாராட்டுதல்களோடு மிகப்பெரிய சேவை செய்து வருகிறது. இப்பள்ளி பிப்.18-ம் தேதி இதன் வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது. இது தனது எதிர்க்கால கல்விப்பணியைத் திறம்பட முன்னோக்கி எடுத்துச்செல்ல ஜெபியுங்கள்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத் திற்காகத் தாங்கள் யாவரும் ஏறெடுக்கும் கருத்தான விண்ணப்பங்களுக்காகவும், கொடுக்கும் ஆதரவுகளுக்காகவும் நாங்கள் நன்றி கூறுகிறோம். பல இடங்களில் மிஷனரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் சந்திக்கும் கஷ்டங்கள், எதிர்ப்புகளை முன்னிட்டு, தங்களது அனுதின ஜெபங்களில் நமது மிஷனரிகள் அனைவரையும் ஒருநாளைக்கு ஒருமுறையாவது நினைவுக்கூர்ந்து ஜெபிக்கக் கேட்கிறோம். அதுமட்டுமல்ல, நமது தேச எல்லையெங்கிலும் தேவ வசனம் எவ்வித தடையுமின்றி வெடித்துப் பரவவும் ஜெபியுங்கள்.

தேவஊழியத்தில் தங்களின் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**



# குஜராத் பணித்தள விஜயம்

## கோலார் தங்கவயல்

கர்நாடகா மாநில கோலார் தங்கவயல் முன்னேற்றப்பணி ஊழியர்களோடு இணைந்து கடந்த 2022 அக்டோபர் மாதம் 31-ம் தேதி முதல் நவம்பர் 5-ம் தேதி வரை பெத்தேல் மிஷன் சபையைச் சேர்ந்த ஊழியர்களும், விசுவாசிகளும், நமது ஆதரவாளர் களுமாக மொத்தம் 14 பேர் கொண்ட குழுவாக நாங்கள் குஜராத் மாநிலம் சஹயாத்ரி பிராந்தியத்திலுள்ள பணித்தளங்களைப் பார்வையிட சென்றோம். பின்பு கெர்காமிலுள்ள பிராந்திய செயலரின் உதவியோடு அங்குள்ள அலுவலகத்திற்குச் சென்றுவிட்டு, பின்னர் அஹ்வா, பிப்பள்வாடா, கீலிபானி, வகை, ராண்தா சிறுவர் விடுதி, சில்வாசா பணித்தளத் திலுள்ள ஒஜார் ஆலயம் ஆகிய பணித்தளங்களைப் பார்வையிட்டுவிட்டு, மேலும் ஜாவ்டா ஆங்கிலப்பள்ளி, சிறுமியர் விடுதிப்பிள்ளைகளையும் பார்த்து அவர்கள் தேவைகளை அறிந்து அதற்காக ஜெபித்து, அத்தேவைகளைச் சந்திக்க வேண்டுமென்ற பாரத்தோடு சுகபத்திரமாக எங்கள் ஊருக்கு வந்து சேர தேவன் உதவிச் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# தெரிந்தெடுப்பின் நோக்கம்!

*“பரிசுத்தமுள்ளவர்களாய் இருப்பதற்கு தேவன் நம்மைத் தெரிந்துகொண்டார்.”*
*- எபேசியர் 1:4*



## 1. பரிசுத்தமுள்ளவர்களாய் இருப்பதற்கு எப்பொழுது அவர் நம்மைத் தெரிந்துகொண்டார்?

உலகத்தோற்றத்திற்கு முன்பே தேவன் நம்மைப் பரிசுத்தமாய் வாழ தெரிந்துகொண்டார். ஆயினும் தாவீது கூறுகின்றபடி, துர்க்குணம் மற்றும் தன் தாயால் பாவத்தில் கருவாக உருவான மனிதன் (சங்.51:5), உலகத்தோற்றத்திற்கு முன்பே பரிசுத்தமுள்ளவனாயிருப்பதற்கு எப்படி தெரிந்துகொள்ளப்பட முடியும்?

இதற்கு வேடிக்கையான கதை ஒன்று உண்டு. மருத்துவமனையில் குழந்தையொன்று பிறந்தது; குழந்தையைச் சுத்தம் செய்ய தாதிகள் எடுத்துச்சென்றனர். குழந்தையின் வலதுகை நன்றாக மூடியிருந்தது; தங்களால் இயன்ற மட்டும் அந்த கையைத் திறப்பதற்கு முயற்சி செய்தும் முடியாமற்போன தாதிகள் மருத்துவரை அழைத்தனர். உடனே மருத்துவர் குழந்தையின் அருகில் வந்து குனிந்து நின்றார்; அப்போது அவரது கழுத்தி லிருந்து நீளமான தங்கச்சங்கிலியொன்று தொங்கியது; குழந்தையின் வலதுகை அந்த தங்கச்சங்கிலியைப் பிடித்தது. அதே நேரத்தில், அதன் வலது கையிலிருந்து ஒரு தங்க மோதிரம் கீழே விழுந்தது. மருத்துவர் மற்றும் தாதிகள் ஆச்சரியத்துடன் மோதிரத்தைப் பார்த்தனர். அந்த மோதிரம் பிரசவம் பார்த்த தாதியின் மோதிரம். எனவே, அவர்கள் குழந்தையின் பெற்றோரைக் குறித்து விசாரித்தபோது, ‘குழந்தையின் தந்தை ஒரு திருடன்’ என்று அறிந்தனர். இவ்வாறு பெற்றோர் மற்றும் முற்பிதாக்களின் பாவசுபாவங்களுடன் பிறக்கும் இத்தகைய மனிதன், உலகத்தோற்றத்திற்கு முன்பே பரிசுத்தமுள்ளவனாயிருப்பதற்கு எப்படி தெரிந்துகொள்ளப்பட முடியும்?

இதற்குப் பதிலளிக்கும்வண்ணம் பரிசுத்த பவுல், ‘ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் சம்பாதிக்கக் கூடியதல்ல; இது தேவனருளும் சுத்தமான ஈவு ஆகும்’ (எபே.2:8,9) எனக் கூறுகிறார். நாம் பாவிகளாயிருக்கையில் நமக்காக மரித்து தேவஅன்பை வெளிப்படுத்திய உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவினால் மட்டுமே இது சாத்தியமாகும் (ரோ.5:8; வெளி.13:8). ஆம், இயேசுகிறிஸ்துவுக்குள் தேவன் தமது கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத் தின்படியே கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பை இவருக்குள் நமக்கு உண்டாக்கியிருக்கிறார் (எபே.1:7). ஆகவே, கிறிஸ்துவை விசுவாசித்து, தங்களது பாவங்களை அறிக்கையிட்டு, அவைகளை விட்டுவிட்டு, பரிசுத்த வாழ்வு வாழ தங்களை அர்ப்பணிக்கும் ஒவ்வொருவரையும் தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்பே தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தமாக்கப் பட்டவர்களின் வரிசையில் நிற்கப் பண்ணுகிறார். நாம் இந்த பாக்கியத்தைப் பெற்றிருந்தால் நல்லது. இல்லையெனில், இன்றே நாம் கிறிஸ்துவை விசுவாசித்து, நமது பாவங்களை அறிக்கையிட்டு, அவைகளை விட்டுவிட்டு, பரிசுத்த வாழ்வு வாழ நம்மை அர்ப்பணித்து அவ்வரிசையில் நமது இடத்தைச் சுதந்தரித்துக்கொள்வோம்.

## 2. எவ்வளவு காலம் பரிசுத்தமுள்ளவர்களாய் வாழ அவர் நம்மைத் தெரிந்து கொண்டார்?

“கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிற படியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருக்கும்படிக்கும், என்னுடையவர்களாயிருக்கும்படிக்கும்,

உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்'' (லேவி.20:26). முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கும் இதே அழைப்பைத்தான் தேவன் கொடுத்திருந்தார். அவனது தொண்ணூற்றொன்பது வயதில் அவனுக்குத் தரிசனமாகி, "நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு" (ஆதி.17:1) என்றார். கிறிஸ்துவுக்கு முன்பாக பரிசுத்தமுள்ளவர்களாயிருப்பதற்கு தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தொண்ணூற்றொன்பது வயது என்ன, அவர்கள் நூற்றெழுபத்தைந்து வயதானாலும் தங்கள் பரிசுத்தத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

இன்று பரிசுத்த வாழ்வு வாழ அர்ப்பணித்தவர்களில் பலர், சாட்சி மற்றும் ஊழியத்தின் உச்ச நிலையை அடைந்த பின் உலகம், மாமிசம், பொன், பொருள், பதவி, அதிகார ஆசை ஆகியவற்றில் சிக்கி தங்களது தெரிந்துகொள்ளுதலின் பாக்கியத்தை இழந்து நிற்கின்றனர்.

பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனாக (நியா.13:5) தெரிந்துகொள்ளப்பட்ட சிம்சோன், தன் தெரிந்துகொள்ளுதலை இறுதிவரை காத்துக் கொள்ளத் தவறியதால் கண்கள் பிடுங்கப்பட்டு, வேடிக்கை காட்டும் கூத்தாடியாக, கோமாளியாக மாறிப் போனான்.

இன்றும் ஊழியங்களில் அற்புதங்கள், அடையாளங்கள், வல்லமையான செயல்கள் நடக்கலாம். ஆனாலும் தேவனது தெரிந்துகொள்ளுதலில் நிலைத்திராதவர்கள் "கோமாளிப் பிரசங்கிகளாகவே" இருக்கின்றனர். எனவே, நாம் கிறிஸ்துவை முகமுகமாய் சந்திக்கும் நாள்வரையிலும் பரிசுத்தமுள்ளவர்களாய் ஜாக்கிரதையாக வாழ்ந்து அவருடைய தெரிந்துகொள்ளுதலில் நிலைத்திருப்போம்.

## 3. பரிசுத்தமுள்ளவர்களுக்கு என்ன கிடைக்கும்?

உலகத்தோற்றத்திற்கு முன்பே பரிசுத்தமுள்ளவர்களாயிருப்பதற்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (எபே.1:4) தங்களது வாழ்வை நிறைவு செய்யும்போது வெறுமையாக விடப்படுவதில்லை. தேவன் அவர்களுக்கு, ''உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி (மத்.25:21,23)" என்ற மகிமையான வரவேற்பைக் கொடுத்து, நித்திய இராஜ்யத்திற்குள் அழைத்து, அவர்களைக் கனப்படுத்துவார். பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே,... தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு அதாவது, தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற அவர்களுக்கு தேவன் பரலோக சுதந்தரத்திலே பங்களிப்பார் (1பேது.1:2,5). இந்த மாபெரும் பாக்கியம் நமக்கு முடிவில் வைக்கப்பட்டிருக்கிறபடியினாலே மகிழ்ச்சியோடு பரிசுத்தமாய் வாழ்ந்து கர்த்தரைச் சேவிப்போம்.

வழுவாதபடி நம்மைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை (யூதா 24), நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அனைத்து அங்கத்தினர்கள், ஜெபக் குழுத்தலைவர்கள் மற்றும் ஊழியர்கள் யாவரிலும் பெருக ஜெபிக்கிறேன்; வாழ்த்துகிறேன்.

**– திரு. பால் துரைசாமி பொற்பாதம்,**
FMPB – முன்னாள் கௌரவ
தமிழ்நாடு மாநிலப்பிரதிநிதி.

*இச்செய்தி அண்ணனால் அவரது மரணத்திற்கு முந்தினநாள் 05.01.2023 அன்று எழுதி முடிக்கப்பட்டது.*



# நினைவேந்தல்

**(07.05.1944 - 06.01.2023)**

திரு. பால் துரைசாமி பொற்பாதம் அண்ணன் (வயது-78) அவர்கள், கடந்த 06.01.2023 அன்று தேவராஜ்யத்திற்குள் பிரவேசித்தார்கள். அண்ணனது சரீரம் 08.01.2023 அன்று அவரது சொந்த ஊரான தென்காசி மாவட்டம், மடத்தூரில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கென்று நல்லடக்கம் செய்யப்பட்டது. திரு. பால் துரைசாமி பொற்பாதம் அண்ணன் நமது ஊழியத்தில் திருநெல்வேலி மாவட்டத்தின் 4-வது மாவட்டத்தலைவராக 1978-ம் ஆண்டு பொறுப்பேற்றார்கள். தென்காசியில் இவர் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியபோது உடுமலைப்பேட்டையில் ஆசிரியராகப் பணியாற்றிய திரு. செல்லதுரை அண்ணனுடன் இணைந்து மே 79-ம் ஆண்டு முதல் மே 80 வரை இருவரும் ஓராண்டு விடுமுறை எடுத்து, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவை விரிவுப்படுத்தும் பணியில் மாநில அளவில் ஈடுபட்டார்கள். பல இன்னல்கள், வசதி குறைவுகளைச் சகித்துக்கொண்டு, இப்பணியைப் பள்ளிகளிலும், தாழ்வாரங்களிலும் தங்கி நிறைவேற்றினார்கள். பல ஜெபக்குழுத்தலைவர்களை உருவாக்குவதிலும், ஊக்குவிப்பதிலும் ஆர்வம் காட்டினார்கள். பழகுவதற்கு இனிமையானவர். உறவுப்பாலம் அமைத்து, புதிய அங்கத்தினர்களை நமது இயக்கத்துடன் இணைப்பதிலும், ஊழிய தேவைகளைச் சந்திப்பதிலும், நிதி திரட்டுவதிலும், உற்சாகத்துடன் உழைத்தவர். வயதில் குறைந்த இளைஞர்களைத் தம்பியென்றும், தங்கச்சியென்றும் அன்புடன் அழைத்து ஆலோசனைகளைக்கூறி, அவர்களை ஆவிக்குரிய தலைவர்களாகவும், மிஷனரிப்பணி ஆர்வலர்களாகவும், முழுநேர ஊழியர்களாகவும் உருவாக்கியவர். மனதில் சரியென்று தோன்றியதை வெளிப்படையாகப் பேசினவர். மாற்று கருத்துக்களைத் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் கொண்டவர். இவர் இந்தியா கிறிஸ்துவை அறிய வேண்டும் என்ற தரிசனத்துடன் வாழ்ந்து முடித்ததுடன், தன் மகளை மிஷனரிப்பணிக்கு அர்ப்பணித்தவர். செயற்குழு, பொதுக்குழு, தேசிய திட்டக்கூடுகை எனப் பல்வேறு அங்கங்களிலும் சிறப்பான பங்களித்தவர். பணித்தள விஜயத்தின்போது மால்தோ ராஜ்மஹால் கிறிஸ்தவ கல்வி மையங்கள் உருவாக நல் ஆலோசனையை வழங்கியதுடன், அக்குழுவின் தலைவராகவும் செயல்பட்டவர்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 8-வது பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக்குழுவின் தலைவராகச் சிறப்பாகச் செயல்பட்டார்கள். இவரது வாழ்விற்காய் கர்த்தருக்கு நன்றி கூறுகிறோம்.

அண்ணன் விட்டுச்சென்றிருக்கின்ற அவரது மனைவி திருமதி. கமலம் ஜெபக்கனி அக்கா அவர்கள், மகள்கள் திருமதி. ஹெப்சிபா பாக்கியம், திருமதி. டெய்சி பொற்செல்வி, மகன் திரு. சாம்ராஜ் பொற்பாதம் ஆகியோரின் குடும்பங்கள் மற்றும் பேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**– அருட்திரு. ஜாண் பெர்லின்,** பொதுச் செயலாளர்.

# இளைஞர் பிரிவு
# பொன்விழா ஆண்டு

## (1973 - 2023)






“அற்பமானதோர் ஆரம்பம் அணைக்கக்கூடாத சிறு தீபம் கர்த்தரே நமது காரணம்”...என்ற பாடல் வரிகள் நம் எண்ண அலைகளை 50 ஆண்டுகள் பின்நோக்கி பயணிக்க வைத்தது. 1973-ம் ஆண்டு முத்துநகர் முயல் தீவு பரபரப்போடிருந்தது ஆம்... அணுகுசாலை இல்லை, அலங்கார வாசலில்லை, அடிப்படை வசதியில்லை ஆனால் அசாத்திய விளைவுகளை தேவன் நிகழ்த்தினார். “பாதாள சேனை இன்னும் இன்னும் ஜெயிக்க விடாதிரும் சேனை வீரராய் வாலிபர் பலர் எழும்பச் செய்திடும்” என்ற பாடல் வரிகளை எமில் அண்ணன் பாடப்பாட அநேக இளைஞர்கள் தங்களை தேவனுடைய பணிக்கென ஒப்புக்கொடுத்தனர். அந்த அதிர்வின் எழுச்சி அலை 50 ஆண்டுகளை வெகு வேகமாய் கடத்திகொண்டு வந்து விட்டது.

இந்த விளைவு தொடரோட்டமாய் தொடர இயக்கமாய் வாஞ்சித்து 2023-ம் ஆண்டு பொங்கல் விடுமுறை நாட்களில் ‘‘நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்’’ என்ற கருப்பொருளில் இளைஞர் பிரிவின் 50-ம் ஆண்டு பொன்விழா முகாமாக ஜனவரி 14-16-ம் தேதிகளில் நாசரேத் - ஜெயராஜ் அன்னபாக்கியம் CSI பொறியியல் & பாலிடெக்னிக் கல்லூரியில் வைத்து வாலிபர் பிரிவின் பொன்விழா நிகழ்வை தேவ நாம மகிமைக்காய் நடத்திட தேவன் கிருபைச் செய்தார்.

முகாமின் காலை தியானங்களில் தேவ செய்தியை வழங்கிய அருள்திரு. ஜான் பெர்லின் மற்றும் அருள்திரு. இம்மானுவேல் அவர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். அருள்திரு ரவிக்குமார் அவர்களின் குறும்படம் மற்றும் குறுஞ்செய்தி அனேக இளைஞர்களை அர்ப்பணிப்புக்கு நேராக நடத்தியது.

இளைஞர் பாளையத்தின் முதல் நாள் கூடுகையை வாலிபர் பிரிவு பொறுப்பாளர் அருட்திரு. டேனியல் அருள்மணி நடத்தினார்கள். நெல்லை பாடல் குழுவினர்கள் சகோ. சேவியர் தலைமையில் வந்திருந்த அனைவரையும் எழுச்சி பெற வைத்தது. முக்கிய பிரமுகர்களை மற்றும் செய்தியாளர்களை முகாம் ஒருங்கிணைப்பாளர் அருட்திரு. TYP. ஆசீர் அவர்கள் வாழ்த்தி வரவேற்றார்கள்.

பொன்விழா ஆண்டு சிறப்பு மலரை இயக்கத்தின் பொதுச் செயலாளர் அருட்திரு. ஜாண்

பெர்லின் அண்ணன் அவர்கள் ஜெபித்து வெளியிட்டார்கள். இயக்கத்தின் உப தலைவர் திரு. ஜேம்ஸ் தர்மபாலன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். முகாம் அமைப்பாளர் டாக்டர். அருள்ராஜ் டேனியல் அவர்கள் வளாகத்தின் ஒழுங்குகளை அறிவித்தார்கள்.

இளைஞர் பாளையத்தில் 665 வாலிபர்கள், 215 இளம் வாலிபர்கள், தன்னார்வ ஊழியர்கள் மற்றும் நமது இயக்கத்தின் தலைவர்கள் 160 என மொத்தம் 1040 பேர் கலந்து கொண்டனர். முகாமின் முதல் நாள் சுவிசேஷகர். சுசி பிரபாகரதாஸ் அவர்கள் தேவ வார்த்தையைப் பகர்ந்துகொண்ட போது, 263 வாலிப தம்பி, தங்கைகள் முதல்முறையாகக் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். முதல் நாள் சந்தியாவில் திரு. நவநீதர் அண்ணன் அவர்கள் அளித்த தேவச்செய்தி மூலம் 68 பேர்கள் முழுநேரப்பணிக்கு ஒப்புக்கொடுத்தனர்.

இரண்டாம் நாள் கூடுகையை முன்னாள் வாலிபப்பிரிவு பொறுப்பாளர் திரு. செல்வின் அவர்கள் நடத்தினார்கள். மிஷனரிகளோடு நடத்தின கலந்தாய்வு மிஷனரிகளுடைய அர்ப்பணிப்பையும், அழைப்பையும் குறித்து அநேகர் அறிந்துகொள்வதற்கு சவாலாக இருந்தது. அன்று சந்தியாவில் 85 பேர்கள் முழுநேரப்பணிக்கு ஒப்புக்கொடுத்தனர். மற்றும் 141 ஜெபக்குழுக்கள் உருவாகின. இளைஞர்களுக்கும், தலைவர்களுக்கும் தன்னுடைய ஆரம்பக்கால இளைஞர் பாளையத்தின் அனுபவங்கள் மற்றும் தேசத்தின் சூழ்நிலையைப் பகிர்ந்து கொண்ட அண்ணன் டாக்டர். ஜெகதீஸ் பாண்டியன் (முன்னாள் தலைமை செயலர் – குஜராத்) அவர்களின் பகிர்வு வந்திருந்த அனைவருக்கும் சவாலாக அமைந்தது. 15–ம் தேதி இரவு நடைபெற்ற முகாமின் தணழ்கொழுந்து (Camp fire) நிகழ்வு அனைவரின் வாழ்விலும் மறக்கவியலாத நிகழ்வாய் அமைந்தது. தேவனுக்குப் பிரிமில்லாதவைகளை விட்டுவிடத் தீர்மானித்த காரியங்களை தீயில் தகனித்துத் தங்களை அர்ப்பணித்து சென்ற நிகழ்வு தேவனுக்காய் இன்னும் ஒரு அடி முன்னேறிச் செல்ல வழி வகுத்தது.

மூன்றாம் நாள் கூடுகையை இளம் வாலிபப்பிரிவு, தன்னார்வ ஊழியரான திரு. ஐசக் கமலேஷ் அவர்கள் நடத்தினார். முன்னாள் வாலிபர் பிரிவு ஊழியர்களின் குடும்பங்களோடு கொண்ட கலந்தாய்வு வந்திருந்த அனைத்து வாலிபர்களும் இவ்வூழியத்திலுள்ள அவர்கள் பங்கை அறிந்துகொள்ளவும், செயல்படவும் சவால்நிறைந்ததாக அமைந்தது. முகாமின் செயல்படும் நேரத்தில் காணிக்கையாக (ரூ.36,075/–, ரூ.36,434/– ) மொத்தம் ரூ.72,509/– வரப்பெற்றோம். மற்றும் பொன்விழா ஆண்டு வாலிபர் பிரிவு பணித்தள திட்டம் – 50 இருசக்கர வாகனம் வாங்கிக்கொடுப்பது. அதில் 6 பைக் வாங்க வாக்குத்தொகையாக வரப்பெற்றோம்.

முகாம் நாட்களில் உதவி செய்த இரண்டு கல்லூரி முதல்வர், தாளாளர், விரிவுரையாளர்கள் மற்றும் கல்லூரி ஊழியர்கள் அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து முகாம் அமைப்புக்குழு மற்றும் இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். முகாமின் பொருளாளர் திரு. J. செல்வராஜ் அண்ணன் அவர்கள் நன்றியுரை கூற, அர்ப்பணிப்பு ஆராதனையுடன் 2023 இளைஞர் பாளையம் வாலிபர் முகாம் இனிதே நிறைவுற்றது. தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக!

**– அருட்திரு. டேனியல் அருள்மணி** – வாலிபர் பிரிவு




# மிஷனரி டைரி

## ஜெப ஆவி ஊற்றும்!



**1990-ம்** ஆண்டு சிவான் மாவட்டத்தில் ஒரு தெருவில் நடந்துகொண்டு இருந்தேன். அப்போது அந்த தெரு முழுவதும் கொண்டாட்டமும் கோலாகலமுமாகக் காணப் பட்டது. அது பிற மத வழிபாட்டு விழாக்காலம். என்னையும் அறியாமல் ஜெப ஆவி என்னில் ஊற்றப்பட்டு, அந்த தெருவில் நின்று பாரத் தோடு ஜெபித்தேன். ஏனெனில், அவர்கள் மிகவும் ஏழ்மையான மக்கள். ஆனால், அம்மத வழிபாட்டு விழாக்காலங்களில் இவ்வளவு செலவு செய்து இவ்விழாவைக் கொண்டாடுகிறார்களே என்ற பாரம் அதிகரித்து, மிகவும் பாரத்தோடு ஜெபிக்க ஆரம்பித்தேன். ஏன் இப்படிப்பட்ட ஜெப பாரம் என்னை அழுத்துகிறது என்று எண்ணியவாறு, அங்குள்ள மக்களின் ஏழ்மை நிலை மாறவும், இருள் நிறைந்த வாழ்விலிருந்து அவர்கள் கண்கள் திறக்கப்படவும் பாரத்தோடு ஜெபித்து பின் வீடு திரும்பினேன். என் மனைவி யிடமும் அந்த ஜெப பாரத்தைக் குறித்து பகிர்ந்து குடும்பமாகவும் ஜெபித்தோம். சில மாதங்கள் கழித்து எனக்குத் தெரிந்த நபரான சுரேந்தர் என்பவர் நான் எந்த தெருவில் நின்று ஜெபித்தேனோ, அதே தெருவைச் சேர்ந்த ஒருவரை அவர் என்னிடத்தில் அழைத்து வந்தார். அவரது பெயர் தசரத் என்பதாகும். அவர் ஒரு பக்தி நிறைந்த மனிதர். கிறிஸ்துவின்மீது விசுவாசம் கொண்ட சுரேந்தர் என்பவர் என்னிடம் அவரை அழைத்து வந்தது, எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவரோடுகூட இயேசுவின் அன்பினைப் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தேன். ஆனால் அவரோ, “நான் ஒரு தீவிர பக்தர். தினமும் காலையில் என் தெய்வத்தை வழிபட்டு வருகிறேன். ஆகவே, உங்கள் கடவுள் எனக்கு வேண்டாம்” என சுவிசேஷ சத்தத்திற்கு செவி விலக்கிச் சென்றார். ஆனாலும் அவர் என்னோடு நண்பராகத் தொடர்ந்து இருந்து வந்தார். சுமார் ஒரு ஆண்டு காலம் இருக்கும். தசரத்தின் குடும்பத்தில் நடந்த ஒரு சம்பவத்தின் மூலம் அவர் தன் வாழ்வில் ஒரு பெரிய மாற்றத்தைக் கண்டார். அவரே எங்கள் வீட்டிற்கு வந்து, “இந்த இயேசு எனக்கு வேணும். அவரைக் குறித்து சொல்லுங்கள்!” என கேட்கத் துவங்கினார். தற்சமயம் அவர் சிவானில் ஒரு பெரிய ஊழியக்காரராக தேவநாம மகிமைக்காக வாழ்ந்து வருகிறார். நான் எந்த தெருவில் நின்று ஜெபிக்க உந்தப்பட்டேனோ, அதே தெருவிலுள்ள தசரத் மற்றும் 100 பேருக்கும் அதிகமானோர் இயேசுவின் பிள்ளைகளாக மாறிவிட்டனர். இதை வாசிக்கும் நமக்கும்



**அருட்திரு. S. தேவதாஸ்**
FMPB

தேவன் கொடுக்கும் ஜெப பாரம் கிடைக்கும் இடம் எந்த இடமாகவும் இருக்கலாம்; ஆனால் நாம் தயங்காமல், வெட்கப்படாமல் தெரு ஓரத்தில் நின்று தேவபாரத்தை ஏற்று ஜெபிக்கும்போது, ஒரு தசரத் உருவாக்கப்படுகிறார். அவர் மூலம் அநேகர் ஆண்டவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கின்றனர். இது என்னுடைய ஊழிய வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகும். ஜெப ஆவியானவர் நம்மில் ஜெப பாரம் ஊற்றும்போது, உடனே அவருடைய ஏக்கம் அறிந்து நாம் ஜெபிக்கும்போது, ஆத்தும அறுவடையைப் பணித்தளங்களிலும், நாம் வாழும் பகுதியிலும் காணலாம். அதற்கு தேவை தாமதமில்லாத, தடுமாற்றமில்லாத ஜெப வாழ்வு. நாம் அப்படி ஜெபிக்கும்போது, தசரத் ஆண்டவரின் அடியவராக மாறி அவருடைய குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக மாற்றப்பட்டது போல நம்மாலும் அநேக தசரத்களை உருவாக்க முடியும். “தேவன் பக்தியுள்ளவர்களைத் தமக்காகத் தெரிந்துகொண்டார்” என்று சங்கீதம் 4:3-லும், “கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கிறார்” என்று 2பேதுரு 2:9-லும் வாசிக்கிறோம். ஆகவே ஜெபவீரரே! நமது ஜெப அக்கினி அணையாமல், அவியாமல் பார்த்துக்கொள்வோம். கர்த்தர் தாமே நமக்கு அதற்கு உதவுவாராக!

**– செல்வின்**

# வருடாந்திர 1000 மணி நேர தொடர் ஜெபம்

**பிப்ரவரி 22 முதல் ஏப்ரல் 5 வரை**

2012-ம் ஆண்டு துவங்கி தபசு கால நாட்களில் தேசமெங்கும் நாம் ஏறெடுத்த 1000 மணி நேர ஜெபத்தை தேவன் ஆசீர்வதித்துப் பெரும் விளைவுகளைத் தந்துள்ளார். ஆகவே, இவ்வாண்டு பிப்ரவரி 22-ம் தேதி துவங்கி ஏப்ரல் 5-ம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் 1000 மணி ஜெப நேரத்தைக் கிரமமாக அனுசரிக்க மறவாதிருப்போம். 2023-ம் ஆண்டின் தபசு கால நாட்களில் தேவ பிள்ளைகளாய், தேவ சமுகத்தில் தேசத்தின் சுபீட்சத்திற்காக, கடைசிக்கால திருச்சபை எழுப்புதலுக்காக, ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக திறப்பிலே நின்று மன்றாடி ஜெபிக்க உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.



**ஜெப முறைமைகள்**

- ஜெபக்குழுக்கள், சபைகள் மற்றும் முன்னேற்றப் பணிமாவட்டங்களில் சங்கிலித்தொடர் ஜெபங்கள்
- அனைத்து முன்னேற்றப்பணி பிராந்தியங்களில் 12/ 24/ 72 மணி நேர உபவாச ஜெபங்கள்
- சபைகள், ஜெபக்குழுக்கள், தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இல்லங்களில் 1 / 3 மணி நேர மன்றாட்டு ஜெப நேரங்கள்

தனி நபர்களாய், குடும்பங்களாய், சபைகளாய், ஜெபக்குழுக்களாய் திரளாய் ஜெபங்களில் பங்கெடுப்போம். தேவ மகிமையை தேசத்திலே காண்போம்.

ஜெபக்குறிப்புகளுக்கு உங்கள் பகுதி முன்னேற்றப்பணி செயலர்கள் அல்லது ஜெபப்பிரிவைத் தொடர்பு கொள்ளவும். (prayer@fmpb.org / 044-2657 4311)

ஜெபப்பிரிவு **– நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

# தரியாபூர்
# திருச்சபை வரலாறு

**ஆரம்பம் முதல் ஜனவரி 2021 வரை**

## ஃபத்தேஹ்பாத் பணித்தளம், ஹரியானா பிராந்தியம் – வட மண்டலம்



*எழுதியவர்:*
**திருமதி. ஆக்னஸ் எட்வர்ட்**

தரியாபூர் என்பது இந்தியாவிலுள்ள ஹரியானா மாநிலத்தின் ஃபத்தேஹ்பாத் மாவட்டத்தைச் சார்ந்த ஃபத்தேஹ்பாத் தாலுகாவிலுள்ள ஒரு கிராமமாகும். இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு - 2011 - ல் வெளியிட்ட அறிக்கையின்படி, இக்கிராமத்தில் 1090 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். தனி மனிதர் எண்ணிக்கையில் அவர்கள் 5129 பேர் உள்ளனர். இக்கிராமம் இந்திய அரசியலமைப்பு மற்றும் பஞ்சாயத்ராஜ் சட்டத்தின்படி, தரியாபூர் கிராமத்தின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்பஞ்ச் (கிராமத்தலைவர்) மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இக்கிராமத்தில் மொத்த மக்கள்தொகையில் 37.90% பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். தற்போது இப்பட்டியல் சமூகத்தினரில் பழங்குடியினர் இல்லை. குறிப்பாக, இம்மக்கள் விவசாய நிலஉரிமையாளர்களாக அல்லது விவசாய தொழிலாளர்களாக வேலை செய்து வாழ்ந்து வருகின்றனர்.

**ஆரம்பம்:** ஹரியானா மாநிலத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் பணித்தளம் சிர்சா ஆகும். இது நமது மிஷனரிகளான திரு. ஜேம்ஸ் கெய்சர் ஹோசன்னா மற்றும் திரு. டி. அந்தோணி ஆகியோரால் 1974-ம் ஆண்டில் திறக்கப்பட்டது. ஏப்ரல் 1977-ல் திரு. டி. அந்தோணி அப்பணித்தளத்தை விட்டுச் சென்றப்பிறகு, திரு. எஸ். ராஜேந்திரன் திரு. கெய்சரோடு இணை ஊழியராக இணைந்தார். 1979-ல் சிர்சா மிஷனெரிகளான திரு. ஜேம்ஸ் கெய்சர் மற்றும் திரு. எஸ். ராஜேந்திரன் ஆகியோர் ஒரு கிறிஸ்தவப் பஞ்சாபி செவிலியராக சிவில் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த திருமதி. பிரகாஷ் சந்த் என்பவருடைய தொடர்பின் மூலம் ஃபத்தேஹ்பாத் ஊழியத்தைத் தொடங்கி, 1983-ல் ஃபத்தேஹ்பாத் பணித்தளம் திறக்கப்பட்டது. அங்கே திரு. ஜாய் குட்டி & திருமதி. ரோசம்மா ஆகியோர் முன்னோடி மிஷனரிகளாக நியமிக்கப்பட்டனர். 1984-ல் திரு. பால் ஆனந்தன் & திருமதி. சாரா ஜோதி ஆகியோர் திரு. ஜாய் குட்டி குடும்பத்துடன் உடன் ஊழியர்களாக ஃபத்தேஹ்பாத் பணித்தளத்தில் சேர்ந்தனர்.

1985-ல் தரியாபூர் கிராமத்திற்கு நற்செய்தி சென்றடைந்தது. அங்கு திரு. கிஷான்லால் பஜாஜ் என்ற ஒரு துணி வியாபாரியுடன் தொடர்பு ஏற்பட்டு, நமது மிஷனரிகள் தவறாமல் அவருடைய வீட்டிற்குச் சென்று தேவனுடைய வார்த்தையைப் பகர்ந்து கொண்டனர். ஜுலை 1985-ல் அவரது வீட்டில் ஒளிவில்லைபடக்காட்சி (ஸ்லைடு ஷோ) மூலம் பலரும் பார்க்கும்படி இயேசுத் திரைப்படம் திரையிடப்பட்டது. டிசம்பர் 1985-ல் FMPB நமது முன்னாள் பொதுச்செயலாளரான திரு. பேட்ரிக் ஜாஷ்வா அவர்கள், திரு. கிஷான்லால் பஜாஜின் வீட்டில் பிரசங்கம் செய்தார். பின்பு ஜனவரி 1986 முதல் திரு. பஜாஜ் ஃபத்தேஹ்பாத்தில் நடைபெற்றுவந்த நமது ஆராதனையில் பங்கேற்கத் தொடங்கினார். ஜுன் 1986-ல் திரு. ஐ.கே. ஆபிரகாம் குடும்பத்தார் திரு. பால் ஆனந்தன் குடும்பத்தினருக்குப் பதிலாக ஃபத்தேஹ்பாத் பணித்தளத்தில் பணியமர்த்தப்பட்டனர்.

*தரியாபூர் கிராமத்தின் முதல் விசுவாசி மறைந்த. திரு. கிஷான்லால் பஜாஜின் மனைவி திருமதி. கமலேஷ் பஜாஜ் தனது சாட்சியை விவரிக்கிறார்:*



“நான் முல்தானி சமூகத்தைச் சேர்ந்த கமலேஷ். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு நாங்கள் ஒவ்வொரு வருடமும் பற்பல வழிபாட்டு ஸ்தலங்களுக்குச் செல்வோம். என் கணவர் சண்டைத்தகராறில் ஈடுபடுவதோடு, வேறுபல மோசமான செயல்களிலும் ஈடுபட்டு வந்தார். ஒருநாள் மிஷனரிகளான ஜாய் குட்டி பையாவும், ஆபிரகாம் பையாவும் ஒரு கடையில் அமர்ந்திருந்த என் கணவரிடம் சில துண்டுப்பிரதிகளைக் கொடுத்தார்கள். உடனே, அவர் அவர்களை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தார். அன்றிலிருந்து அவர்கள் தரியாபூர் கிராமத்திற்கு வரும்போதெல்லாம் எங்கள் வீட்டிற்கு வந்து செல்வார்கள். அதன்பிறகு நாங்கள் பிற வழிபாட்டு ஸ்தலங்களுக்குச் செல்வதை நிறுத்தி விட்டோம். மிஷனரிகள் ஒருநாள் இரவு எங்கள் கிராமத்தில் இயேசுத்திரைப்படத்தைத் திரையிட்டனர். மறுநாள் காலையில் பலர் இயேசுகிறிஸ்துவைப் பற்றி மேலும் கேட்டறிய விரும்பினார்கள். அன்று பகவான் தேவியின் குடும்பம் மற்றும் வேறொரு குடும்பத்தைச் சார்ந்த தாய் தகப்பனற்ற 6 மகள்கள், ஒரு மகன் மற்றும் அவர்களது குடும்பங்கள் இயேசுத்திரைப்படத்தின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். பின்பு ஒவ்வொரு சனிக்கிழமையும் எங்கள் வீட்டில் ஜாய் குட்டி பையா மற்றும் ஆபிரகாம் பையா ஆகியோரால் சத்சங் கூடுகை நடத்தப்பட்டது. பலர் அக்கூடுகையில் கலந்துகொள்ள ஆரம்பித்ததால், அங்கு அவர்கள் அனைவரும் அமர போதுமான இடம் இல்லாதிருந்தது.”

இவ்வாறு ஜுன் 1986 முதல் நமது மிஷனரிகளால் திரு. கிஷான்லால் பஜாஜின் வீட்டில் வழக்கமாக ஆராதனை நடத்தப்பட்டது. திரு. கிஷான்லால் பஜாஜின் குடும்பத்திற்கு 1985-ல் நற்செய்தி சென்றடைந்திருந்தாலும், இக்குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட 2 ஆண்டுகளுக்குப் பிறகே திரு. கிஷான்லால் பஜாஜ் 18.04.1987-ல் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். அதன்பின் அவர் எங்குச் சென்றாலும் புதிய ஏற்பாட்டை எடுத்துச்செல்ல தொடங்கினார். அவரிடம் காணப்பட்ட இம்மாபெரும் மாற்றம் தரியாபூர் மக்களிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. பிப்ரவரி 1988-ல் ஹிசாரிலுள்ள CNI ஆலயத்தில் வைத்து டெல்லி திருமண்டலத்தின் பேராயர் மாமறை. அருட்திரு. மக்புல் காலேப் அவர்களின் முன்னிலையில் பின்வரும் தரியாபூர் விசுவாசிகளான

திரு. கிஷான்லால் பஜாஜ் & திருமதி. கமலேஷ் மற்றும் திரு. ஜெய் தயாள் & திருமதி. பரமேஸ்வரி ஆகியோர் தங்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தினர்.

## திருச்சபை வளர்ச்சி:

09.07.1994-ல் தரியாபூர் தனி பணித்தளமாக உருவாக்கப்பட்டு, அங்கே நமது மிஷனரி திரு. ஜேசுபாய் மெக்வானின் குடும்பத்தினர் பணியமர்த்தப்பட்டனர். 1995-ம் ஆண்டின் இறுதி வரை தரியாபூர் ஒரு தனி பணித்தளமாகச் செயல்பட்டது. பின்னர் அது மீண்டும் ஃபத்தேஹ்பாத் பணித்தளத்துடன் இணைக்கப்பட்டது. திரு. கிஷான்லால் பஜாஜ் & திருமதி. கமலேஷ் பஜாஜ் ஆகியோர் நமது மிஷனரிகளுடன் சேர்ந்து பலருக்கு நற்செய்தியை எடுத்துச் சென்றனர்.

*கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு 14.02.1993-ல் தனது விசுவாசத்தை அறிக்கையிட்ட தரியாபூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. பரமேஸ்வரி, இங்கே தனது சாட்சியைப் பகர்ந்து கொள்கிறார்:*



‘‘எங்களின் பூர்வீகம் தர்மி கிராமம். அங்கிருந்து நாங்கள் தரியாபூர் கிராமத்திற்குப் புலம்பெயர்ந்து வந்தோம். 5 லிட்டர் பால் தந்துக்கொண்டிருந்த எங்கள் எருமை நாட்கள் செல்லச்செல்ல 1 லிட்டர் வீதமாகக் தந்து, பின்பு பால் தருவதையே நிறுத்தி விட்டது. எனவே, நான் ஒரு மந்திரவாதியை அணுகி அவர் தந்த இனிப்பை எருமைக்கு கொடுத்தும், அதனால் எப்பயனுமில்லை. என் அம்மா எருமைக்காக ஜெபம் செய்ய கமலேஷ் பஜாஜ் திதியிடம் செல்லுமாறு என்னிடம் கூறினார். அதற்கு நான், ‘‘மந்திரவாதியால் எருமை மாட்டைக் குணப்படுத்த முடியாதபோது, கமலேஷ் திதி எப்படி இதைச் செய்ய முடியும்?” என்றேன். ஆனால், ஜெபத்திற்குப்பின் எங்கள் எருமை பால் தர ஆரம்பித்தது. இந்தச் சம்பவத்தால் நான் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்து, அவரைப் பின்பற்றுபவராக மாறினேன்.”

தரியாபூர் ஆலயத்தின் மூலம் ஷேகாவாலி டானி மக்கள் கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொண்டனர். திருமதி. ராஜ்பாலாவின் சகோதரி மனநிலை பாதிக்கப்பட்டார். அவர் அப்போது அங்கே மிஷனரிகளாக இருந்த திரு. தேவ அன்புக்கண் மற்றும் திரு. ராஜா எட்வின் மோசஸ் ஆகியோரிடம் தன் சகோதரிக்காக ஜெபிக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன் விளைவாக தேவன் அவருடைய உடல்நிலையில் சிறிது முன்னேற்றம் காணச்செய்தார். எனவே, திருமதி. ராஜ்பாலா மற்றும் அவரது அண்டை வீட்டாரான திருமதி. குட்டி ஆகியோர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, 1993-ல் திருச்சபையில் இணைந்தனர். பின்பு திருமதி. ராஜ்பாலா மற்றும் திருமதி. குட்டி ஆகியோர் தீய ஆவியின் பாதிப்பிற்குள்ளாகியிருந்த ஒரு மகளின் தகப்பனான திரு. பால்குராமிடம் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி கூறினர். முதலில் அவர் எதிர்த்தார்; ஆனால், அவரது மகளின் உடல்நிலை மோசமானபோது, அவர் நமது மிஷனரிகளைத் தனது வீட்டிற்கு ஜெபம் செய்ய அழைத்தார். மிஷனரிகள் சுவிசேஷத்தைப் பகர்ந்து கொண்டு அவருடைய மகளுக்காக ஜெபித்தனர். தேவன் அவரது மகளைத் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்தார். எனவே, திரு. பால்குராமின் முழுக்குடும்பமும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, 28.09.1993-ல் சபையில் இணைந்தனர். அதன்பிறகு ஓட் ராஜ்புத் சமூகத்தைச் சேர்ந்த பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதோடு, ஷேகாவாலி டானி கிராம விசுவாசிகளும் தரியாபூர் ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள ஆரம்பித்தனர்.

தரியாபூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. பிரேம் குமாரி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு 21.07.1996-ல் சபையில் இணைந்தார். பின்பு அவர்தன் விசுவாச வாழ்வில் பின் மாற்றமடைந்தபோதிலும், தனது மகள் பபிதாவின் திருமண வாழ்வில் உண்டான பிரச்சினைகளின் மத்தியிலும் பபிதா தனது விசுவாசத்தில் உறுதியாக இருந்ததைப் பார்த்து தானும் மீண்டும் கர்த்தரை விசுவாசிக்கத் தொடங்கினார்.

*மகள் பபிதா, உபவாச ஜெபத்தின் மூலம் எவ்வாறு தனது விசுவாசம் கிறிஸ்துவில் உறுதியானது என்பதை இங்கே விவரிக் கிறார்:*

"நான் என் பள்ளிப்படிப்பை முடித்து, அநேக தடைகளுக்கிடையே பி.ஏ., பட்டப்படிப்பையும் முடித்தேன். எனக்கு முதுகலை பட்டப்படிப்பு படிக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தாலும், வேலையும் தேடிக்கொண்டிருந்தேன். பின்பு எனது அம்மா என்னை ஹிசாரிலுள்ள கல்லூரியில் எம்.எஸ்.சி., பட்டப்படிப்பிற்குச் சேர்த்தார். ஆரம்பத்தில், என் அம்மா கல்விக்கட்டணம் செலுத்தினார். ஆனால், இரண்டாவது செமஸ்டரில் இருந்து அவர் கட்டணம் செலுத்த மறுத்ததால், அக்கட்டணம் முழுவதையும் 4-வது செமஸ்டரில் கட்டும்படி அறிவுறுத்தப்பட்டேன். அதற்காக நான் உபவாசமிருந்து ஜெபம் செய்தேன். கர்த்தர் எனது கல்லூரி முதல்வரின் கண்களில் எனக்கு தயவு பாராட்டி, ரூ.300/- மட்டும் கட்டினால் போதுமென கிருபை செய்தார். இது என் வாழ்க்கையில் நடந்த ஒரு பெரிய அற்புதம்."

*கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட குக்டான்வாலி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுபாஷ் சந்தர் என்ற மற்றொரு விசுவாசி இங்கே தனது சாட்சியைக் கூறுகிறார்:*

''நான் 15 ஆண்டுகளாக அந்நிய தெய்வங்களைத் தவறாமல் வணங்கி, விளக்கேற்றி, புகழ்ந்து பாடல்களைப் பாடி வந்தேன். என் மனைவியும் மகளும் அசுத்த ஆவியினால் அவதிப்பட்டு வந்தனர். என் வாழ்நாளில் இயேசுகிறிஸ்துவைப் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால், எனது இளைய சகோதரர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். என் மனைவி புஷ்பாவும் இரகசியமாக ஆலயத் திற்குச் சென்றாள்; அவளுக்காக ஜெபம் செய்யப்பட்டது. அசுத்த ஆவியின் பிடியிலிருந்து அவள் விடுவிக்கப்பட்டாள். பின்பு மிகுந்த தயக்கத்துடன், எங்களது மகளின் விடுதலைக்காகவும் சத்சங் கூடுகையொன்றை நடத்த என் மனைவி என்னிடம் அனுமதி கேட்டார். நானும் சம்மதித்தேன். சத்சங் நாளில், மிஷனரி திரு. அலியாக்கிம் ஜெனா மற்றும் இரண்டு பேர் எங்கள் வீட்டிற்கு வந்தனர். எங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும்கூட எங்களுடன் அக்கூடுகை யில் இணைந்திருந்தனர். அன்று என் மகளை விட்டு ஏழு அசுத்த ஆவிகள் ஓடின. இதைக்கண்ட நானும், எங்கள் மகளும், எங்கள் உறவினர்களும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோம். அதன்பின் சிறுநீரகம் செயலிழந்த எனது மைத்துனர் தேவன்மீது நம்பிக்கை வைத்ததால், சிறுநீரகம் வேலை செய்யத் தொடங்கியது. மணமகள் கிடைக்காத அவரது மகனுக்கு கிறிஸ்தவ மணமகளும், எனது மகளுக்கு கிறிஸ்தவ மணமகனும் கிடைத்தனர். நான் கிறிஸ்துவைப் பற்றி மக்களுக்குச் சொல்ல ஆரம்பித்தேன். கிட்டத்தட்ட 15 நபர்கள் என் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்."

2000-ம் ஆண்டில் நமது மிஷனரி திரு. சாலமோன் சண்முகம் மற்றும் அவரது குடும்பத்தினர் பணிசெய்த காலத்தில், ஷாஹிதான்வாலி கிராமத்திற்கு நற்செய்தி சென்றடைந்தது. திருமதி. லஜ் மந்திரி மற்றும் கம்லா ஆகியோர் அதே ஆண்டில் இரட்சிக்கப்பட்டு, தேவ மந்தையில் இணைந்தனர். மார்பில் ஒரு கட்டியால் பாதிக்கப்பட்டிருந்த திருமதி. ஷீலா கிஷனை ஜெபத்தின் மூலம் தேவன்

குணப்படுத்தினார். அதனால் அவரது முழுக்குடும்பமும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டது. பிற்பாடு இன்னும் பலர் தேவ மந்தையில் இணைந்தனர். ஷாஹிதான் வாலி விசுவாசிகளும் தரியாபூர் ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள துவங்கினர். அவர்களில் பெரும்பாலானோர் சோர்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

## ஆலயம் கட்ட நிலம்:

விசுவாசிகளான திரு. கிஷான்லால் பஜாஜ் மற்றும் திரு. ஜெய்தயாளின் குடும்பங்கள் தங்களது தரியாபூர் கிராமத்தில் ஆலய மொன்று கட்டப்பட வேண்டுமென மிகவும் வாஞ்சித்தனர். அக்கிராமத்தில் 1000-க்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வந்தனர். இவர்கள் மத்தியில் வாழ்ந்த நமது விசுவாசிகள் பல பிரச்சினைகளைச் சந்தித்தனர். 4 அல்லது 5 எருமைகளுடன் ஒரு பால் பண்ணையை நடத்தி வந்த முதல் விசுவாசியான திரு. கிஷன்லால் பஜாஜ், அதை விற்று ஒரு ஜாட் இனமனிதரிடமிருந்து நிலத்தை வாங்கி, ஆலயம் கட்டுவதற்கு நன்கொடையாக வழங்கினார். அவர் வழங்கிய நிலம் 8 மர்லா (1 மர்லா = 272 சதுர அடி). ஜுலை 1989-ல் தரியாபூர் ஆலயத் தின் நிலம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் திரு. கிஷன்லால் பஜாஜ் நோய்வாய்ப்பட்டு, ரத்த வாந்தி எடுத்து முடங்கிப்போனார். அந்நிலத்தில் ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு அவர் தனது வாழ்க்கையில் மேலும் ஒரு வருடத்தைக் கூட்டித் தரும்படி தேவனிடம் ஜெபம் செய்தார். அவ்வாறே தேவன் அவரது ஆயுசுநாளை மேலும் ஒருவருடம் நீட்டிக் கொடுத்தார். 1991-ல் தரியாபூர் ஆலயம் கட்டப்படும் வரை திரு. கிஷான்லால் பஜாஜின் வீட்டில் ஆராதனை தொடர்ந்து நடைபெற்று வந்தது. அவர் ஆலயம் கட்டப்பட்ட பிறகு, அவர் ஜெபம் செய்தபடியே 15.03.1994-ல் மரித்துபோனார். முழு கிராமமே ஆலயக்கட்டுமானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தபோதும், பயமின்றி சுவிசேஷத்தை எல்லா நேரங்களிலும் அறிவித்து வந்த திரு. கிஷான்லால் மாத்திரமே அவ்வாலயக்கட்டு மானத்தின்போது நமது மிஷனரிகளோடு உறுதுணையாக நின்றார்.

## ஆராதனைக்குழு மற்றும் சமூகம்:

தரியாபூர் திருச்சபை உறுப்பினர்கள் - ஷேகாவாலி, ஷாஹிதான்வாலி, கர்னாலி, அகன்வாலி, ஹிஸ்ரவாகுர்த், குக்டான்வாலி, ஹரிபுரா, சர்வார்பூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இவர்கள் யாவரும் முல்தானி (மேத்தர்), சோர்கர், ஓட் ராஜ்புத், கம்போஜ் மற்றும் பால்மீகி சமூகங்களைச் சார்ந்தவர்கள்.

**ஆலயத்தின் பெயர்:** பிரபு ஈஸு மஸிஹ் சத்சங் பவன்



(டெல்லி பேராயர் மற்றும் நமது மிஷனெரிகளுடன் தரியாபூர் முதல் விசுவாசிகள்)

அருட்திரு. த. பொன்னுசாமி அவர்களால் 25.02.1991-ல் தரியாபூர் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த ஆலயத்தின் அளவு 40X20 அடி (800 சதுர அடி). நமது விசுவாசிகள் இவ்வாலயக் கட்டு மானப்பணியில் பெரிதும் உதவினார்கள். டெல்லி திருமண்டலத்தின் பேராயர் இவ்வாலயத்தை 28.07.1991-ல் தேவநாம மகிமைக்காகப் பிரதிஷ்டை செய்தார். அப்பிரதிஷ்டை ஆராதனையில் 500 பேர் கலந்து கொண்டனர். அந்நாளில்தானே 13 நபர்கள் புதிதாக தேவமந்தையில் சேர்க்கப்பட்டனர். இத்திருச்சபையார் மேலும் கிறிஸ்துவில் பலங்கொண்டுப் பெருகி, அநேக திருச்சபைகளைப் பெருக்கிட இவர்களுக்காக ஜெபிப்போம்.

# மறக்க முடியாத மாமனிதர்கள்



## திரு. வெங்கடேசன் P. டேனியல்

(1980 - 2013)

### இளமைப்பருவம்

சகோ. வெங்கடேசன் P. டேனியல், ஓசூர் அருகேயுள்ள நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தென் பிராந்திய பணித்தளத்தில் ஒன்றான 'பேரிகை' என்ற கிராமத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ ரல்லாத குடும்பத்தில் 1980-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் தேதி பிறந்தார். இவர் சிறுவயது தொடங்கியே தனது மத பக்தி வைராக்கியத்தில் வளர்ந்து வந்தார். இவருடைய தந்தை திரு. பாப்பண்ணன் சொந்த தொழில் செய்பவராகவும், தாயார் ஜெயாம்மா இல்லத்தரசியாகவும் இருந்து குடும்பத்தை நடத்தி வந்தார்கள். இவருடன் உடன் பிறந்தவர்கள் சகோதரி. இந்துராணி மற்றும் 3 சகோதரர்கள் முருகேசன், சாமுவேல் வெங்கையா, நாகராஜ் ஆகும். சகோ. வெங்கடேசன் தன் வீட்டினருகே உள்ள பள்ளியில் பயின்று, தனது பள்ளிப்படிப்பை வெற்றிகரமாக முடித்தார்.

### இரட்சிப்பின் அனுபவம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணிகள் ஏற்கனவே இவர் வசித்துக்கொண்டிருந்த பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அங்கு பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு திருச்சபையாக தேவனை ஆராதித்தும் வந்தனர். பேரிகையில் தன்னுடைய பெற்றோர் மற்றும் உடன் பிறந்தவர்களுடன் வசித்து வந்த சகோ. வெங்கடேசனின் தகப்பனாருடைய வியாபாரம் சிறப்புடன் காணப்பட்டு, அதன்மூலம் நன்கு வருமானம் பெருகி வந்தது. எனவே, சொந்த வீடு மற்றும் நிலம் அவர்களுக்கு இருந்தது. வியாபாரப் போட்டி பொறாமை யால், யாரோ இவருடைய தாயாருக்கு சூனியம் வைத்து விட்டார்கள். ஆகவே, அவர் மிகுந்த நோயுற்றார். பல மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவர்கள் என பணத்தைச் செலவழித்தும், எந்த சுகமும் கிடைக்கவில்லை. ஆதலால், பல மந்திரவாதிகளிடமும் அழைத்துச் சென்றனர். அதில் ஒரு மந்திரவாதி, "நீங்கள் ஒரு கோயில் கட்டிக்கொடுத்து, ஒரு ஆட்டைப் பலி செலுத்தினால் சுகம் கிடைக்கும்'' என கூறவே, அதன்படி வீட்டை விற்று, ஒரு கோயிலைக் கட்டிக்கொடுத்து பலி செலுத்தியும் சுகம் கிடைக்கவில்லை. மறுபடியும் அவனிடம் சென்றபோது, சகோ. வெங்கடேசனின் தாயார் இன்னும் சில நாட்களில் இறந்து விடுவார் என கூறிவிட்டான். இவ்வாறு மிகுந்த துக்கத்துடன் இருந்த நாட்களில், இவருடைய தந்தை குடும்பத்தை விட்டுப்பிரிந்து சென்று விட்டார். அதனால் தங்குவதற்குக்கூட வீடு

இல்லாமல் நடுத்தெருவில் இந்தக் குடும்பம் விடப்பட்டது. அந்த சமயம் அப்பகுதியில் ஊழியம் செய்துவந்த நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் நமது ஊழியர் சகோ. பேதுரு முனியப்பா மரத்தடியில் தங்கியிருந்த இந்தக் குடும்பத்தைச் சந்தித்து, அவர்களுக்குச் சுவிசேஷத்தைக் கூறினார். முதலில் சுவிசேஷத்தை மறுத்த அவர்கள் பின்பு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கலானார்கள். அவர்களின் ஜெபத்தைக் கேட்டு ஆண்டவர், சகோ. வெங்கடேசனின் தாயாருக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்ததால், இவருடைய தாயார் முதலாவது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். பின்பு சுவிசேஷத்தை சகோ. பேதுரு முனியப்பா மூலம் கேட்ட சகோ. வெங்கடேசன் P. டேனியலும் கிறிஸ்துவை அறிந்து, அவரை ஏற்றுக்கொண்டார். சில நாட்களில் குடும்பமாக அனைவரும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அருகிலுள்ள திருச்சபையில் தேவனை ஆராதித்து வந்தனர். ஆண்டவர் அவர்கள் தங்குவதற்கு ஒரு வீட்டைக் கொடுத்தார். ஆனால், இவருடைய தந்தை கிறிஸ்தவ மார்க்கத்தைப் பின்பற்றவில்லை, பல நாட்கள் ஜெபத்திற்குப் பின், அவரும் குடும்பத்தோடு வந்து இணைந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்.

## ஊழிய அழைப்பு

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சகோ. வெங்கடேசன் P. டேனியல் அனுதினமும் வேதத்தை அதிகமாக வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் நேரத்தைச் செலவிட்டார். தேவனுடைய பணியில் அதிகம் ஆர்வம் கொண்ட இவர், திருச்சபை ஊழியங்களில் உற்சாகமாகப் பங்குப்பெற்றார். தாங்கள் பெற்ற இந்த சமாதானம், விடுதலையை தங்களைப்போல உள்ள குடும்பங்களும் பெற வேண்டும் என்ற ஏக்கத்தோடு, ஆண்டவருடைய பணியைச் செய்ய வேண்டும் என்ற ஆவலையும் தேவன் இவருக்குக் கொடுத்தார். ஒருநாள் அதிக நேரம் ஜெபிக்க ஆண்டவர் இவரை ஏவினார்; நன்றாக ஜெபித்துவிட்டு, தூங்கிக்கொண்டிருந்த இவர் ஒரு கனவு கண்டார். ஒரு கூட்ட மக்களுக்கு முன், தான் நின்று சுவிசேஷத்தை அறிவிப்பதைப் போல அந்தக் கனவு இருந்தது. மறுபடியும் இன்னொரு கனவில் தன் சகோதரனுடன் சேர்ந்து மக்களுக்கு நற்செய்தியை அறிவிப்பது போன்றிருந்தது. இதன் வழியாக தேவன் தன்னை ஊழியத்திற்கு அழைப்பதை அறிந்தார். ஒருநாள் வேதம் வாசிக்கும்போது, ஆண்டவர் கலா.5:13-ன் வாயிலாக இவருடன் இடைப்பட்டு ஊழிய அழைப்பை உறுதிப்படுத்தினார்.

தேவ ஊழியர் ஒருவரின் உற்சாகத்தின் பேரில் இவர் அருகிலுள்ள ஒரு இறையியல் கல்லூரியில் 2002-ல் இணைந்து, வேதத்தை அதிகமாகக் கற்றுக்கொண்டார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சுவிசேஷ இரதத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு, அதோடு இணைந்து ஊழியம் செய்து வந்தார். பின்பு 2008-ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரியாகச் செல்ல விருப்பம் கொண்டு இணைந்தார். உத்தரப் பிரதேசம் ஜான்சியிலுள்ள நமது மிஷனெரிப்பயிற்சி நிலையத்தில் ஓராண்டுப் பயிற்சியை முடித்து, பணித்தளம் சென்று ஊழியத்தை ஆரம்பித்தார்.

## திருமண வாழ்வும் ஊழியமும்

தேவ தூய நியமனப்படி, குஜராத்தில்

மிஷனெரியாகப் பணியாற்றிய சகோதரி. அனியா ஜோஸ்ஃபினை இவர் இல்லறத் துணையாக 2009-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி ஏற்றார். சகோதரி. அனியா திருச்சிராப்பள்ளியில் இருந்து மிஷனெரியாக வந்தவர். இவர்களது திருமண வாழ்வை தேவன் ஆசீர்வதித்து, 2010-ம் ஆண்டு ஏப்ரல் 24-ம் தேதி கிராஸ்பி எபினிஷா என்ற ஒரு பெண் குழந்தையைக் கொடுத்தார். இவர்கள் குடும்பமாக ஜான்சி மிஷனெரிப்பயிற்சி நிலையத்திலும், அதன் பின்னர் நாக்பூர் பணித்தள அலுவலகத்திலும், ஆந்திராவிலுள்ள அசிஃபாபாத் மற்றும் மகாராஷ்டிராவிலுள்ள பாண்டிரகவுடா போன்ற இடங்களிலும் பணியாற்றி னார்கள். 2012-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆந்திர மாநிலம், சித்தூர் பணித்தளத்தி லுள்ள சாந்திபுரத்திற்கு மாற்றப்பட்டு, அங்கு ஆலயக்கட்டுமானப் பணி ஊழியத்தில் ஈடுபட்டு வந்தனர்.

## இறுதி நாட்கள்

சாந்திபுர ஆலயக்கட்டுமானப் பணிகளுக் காகப் பொருட்களைச் சேகரிக்கும் பணியின்போது, திரு. வெங்கடேசன் சாலைவிபத்தொன்றில் சிக்கினார். இவர் சாலையோரம் மோட்டார் சைக்கிளில் நின்றுக்கொண்டிருந்தபோது, ஆழ்துளைக் கிணறு தோண்டக்கூடிய கனரக வாகனம் ஒன்று இவர்மீது மோதியதில் உட்காயங்களால் அதிகம் பாதிக்கப்பட்டார். இவருடைய வயிற்றுப்பகுதி மற்றும் அதன் கீழ்ப்பகுதியிலுள்ள உள்ளுறுப்புகள் யாவும் இந்த விபத்தால் அதிகமான பாதிப்படைந்திருந்தன. இந்த விபத்து 2013-ம் ஆண்டு 26-ம் தேதி பிப்ரவரி மாதம் ஏற்பட்டது. உடனே இவரை அருகிலுள்ள மருத்துவமனையிலிருந்து வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனைக்கு மேற்சிகிச்சைக்காகக் கொண்டு சென்றனர். அங்கு இவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும், அவற்றால் அதிக பலன் ஒன்றுமில்லை. பல உள்ளுறுப்புகள் நசுக்கப்பட்ட நிலையில் இவர் இருந்தபடியால், எந்த சிகிச்சையும் பலன் தராமல், 2013 மார்ச் மாதம் 2-ம் தேதி மாலை கர்த்தருக்குள் தன் இளம் வயதில் நித்திரையடைந்தார். அந்த சமயம் அவருடைய மனைவி இரண்டாவது குழந்தையைப் பெற்றெடுக்க காத்துக்கொண்டிருந்தார். பின்னர் அவரது சரீரம் அவருடைய சொந்த ஊருக்கு எடுத்துச்செல்லப்பட்டு, உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடே நல்லடக்கம் செய்யப்பட்டது. அவருடைய நல்வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம். திருமதி. அனியா, திரு. வெங்கடேசன் P. டேனியல் இறந்த சில நாட்களிலேயே பிரெண்டன் டேனியல் என்ற அழகான ஆண்மகவைப் பெற்றெடுத்தார். இவர் தன் இரு சிறு பிள்ளைகளுடன் திருச்சியை மையமாக வைத்து இளைஞர் பிரிவில் சில காலம் பணியாற்றிய பின், தற்போது திருச்சி முன்னேற்றப்பணி பிரிவில் தேவ ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார். தற்போது இவர்களது இளைய மகனுக்கு மூளையில் ஏற்பட்டுள்ள நீர் தேக்கப் (Hydrocephalus) பிரச்சனை யினிமித்தம் அவன் சிகிச்சை எடுத்துக் கொண்டிருப்பதினால், இச்சகோதரிக் காகவும் இவருடைய இரு கண்மணிப் பிள்ளைகளுக்காகவும் ஜெபித்துக் கொள்வோம்.

*– அருள்திரு. அறிவர். இ. ராஜன்*

# பணித்தள விஜயம்
## ஈரோடு பணி மாவட்டம்



ஈரோடு மாவட்டத்திலிருந்து பணித்தள விஜயமாக நாங்கள் 18 பேர் அடங்கிய குழுவாக கடந்த அக்.24 முதல் நவ.4 வரை அஸோம் மாநிலம் சென்றோம். முதல் நாளில் அவர்களோடு சேர்ந்து ஒருநாள் உபவாச ஜெபம் ஏறெடுத்தோம். இரண்டாம் நாளில் லக்கிம்பூர் பணித்தளம் சென்று, அங்குள்ள விசுவாசிகளின் சாட்சிகளைக் கேட்டோம். 12 வருடம் கூனியாயிருந்த சகோதரி மற்றும் பார்வை இழந்த சகோதரிக்கு தேவன் கொடுத்த அற்புத சுகவிடுதலையைப் பார்த்து தேவனுக்கு மகிமை செலுத்தினோம். மறுநாள் நாராயண்பூர் பணித்தளம் சென்றுவிட்டு இரவு திரும்பும்போது ஆற்றுமணலில் சிக்கிய எங்கள் வாகனத்தை மீட்டெடுக்க அங்குள்ள விசுவாச இளம் பெண்கள் அந்த நடுஇரவிலும் வந்து உதவி செய்தது, மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தினது. அதைத் தொடர்ந்து கோஹ்பூர் பணித்தளம் சென்றுவிட்டு, முடிவாக மிஷனெரிகளைத் தாங்குவோம், அவர்களுக்காக ஜெபிப்போம், திருச்சபைகளைக் கட்டுவோம் என்று தீர்மானம் எடுத்தவர்களாகச் சுகபத்திரமாக வீடு வந்துசேர தேவன் எங்களுக்குக் கிருபை செய்தார்.



# மகிமைக்குள் பிரவேசித்தார்

திரு. அற்புதம் பால்ராஜ் (வயது-84) அவர்கள், கடந்த 05.10.2022 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் நமது ஊழியத்தில் 35 ஆண்டுகள் நாசரேத்-கைலாசபுரம் ஜெபக்குழுத் தலைவராகப் பொறுப்பெடுத்து, மிகச் சிறந்த முறையில் தேவனுக்காகத் தீவிரமாய் பணி செய்ய தன்னை அர்ப் பணித்தவர்; அதிகாலை 4.00 மணிக்கு எழுந்து தேசத்திற்காக, மிஷனெரிப் பணிக்காக ஜெபிக்கும் பழக்கம் கொண்டவர். இவர் விட்டுச்சென்றுள்ள பணியை இவருடைய மனைவி திருமதி. மேரி பாக்கியம் அவர்கள் செய்து வருகிறார்கள். இவரை இழந்து தவிக்கிற மனைவி மற்றும் 3 பிள்ளைகளின் குடும்பத்தாரனைவரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

## மிஷனரித் தரிசன குடும்பக்கூடுகை

**பெரம்பூர் பணிமாவட்டம்**

நாள்: 05.02.2023 ஞாயிறு

நேரம்: மாலை 6 மணி

இடம்: இரயில்வே நியூ ஹால்,
30 - சிறுவள்ளூர் ரோடு, பெரம்பூர்.
(CSI-வெஸ்லி ஆலயம் அருகில்)

**1 பிப்ரவரி** புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பெஞ்சமின் ஜோதி
திரு. ஆரோன்சிங் நர்சாரி, திரு. சங்கர் M.
திருமதி. காந்தி தேவி சிவ்சங்கர்

## ஜம்மு

### சாம்பா: டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் வசிக்கும் 900 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. 2 பேர் புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். சாக்மங்கா கிராமத்திலிருந்து கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட சிலர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். ஹட்டி கிராமத்திலிருந்து சில புதிய குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கின்றனர். கூட்டா கிராமத்தில் புதிதாக ஞாயிறு ஆராதனை துவங்கப் பட்டுள்ளது. தங்களது கிராமத்தைச் சார்ந்த பிற மக்களைச் சுவிசேஷத்தின்மூலம் சந்திப்பதற்கு இப்பணித்தள விசுவாசிகளும், சபை மூப்பர்களும் பேருதவியாக இருந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாங்வாலி கிராமத்தில் சுவிசேஷத்தை எதிர்ப்போர் மனந்திரும்ப; கூட்டா மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் கிடைக்கவும், சுவிசேஷத்திற்கு மக்கள் செவிசாய்க்கவும்; மஹாசா மற்றும் ராஜ்புட் இனமக்கள் கிறிஸ்துவில் தங்களது இரட்சிப்பைப் பெற; நமது சுதேச ஊழியரின் மனைவி ரிட்டுவிற்கு மூலப்பிரச்சினையிலிருந்தும், நமது ஊழியரின் மனைவி திருமதி. மன்பிரீத் கௌருக்கு ஒற்றை தலைவலி பிரச்சினை யிலிருந்தும் பூரண சுகம் கிடைக்க; சாக்மங்கா, பாண்டுலூர், பர்குவால், சர்கால் மற்றும் ராஜ்புரா கிராமங்களிலிருந்து ஊழியத்தில் நமக்குப் புதிய தொடர்பாளர்கள் கிடைக்க; சாங்வாலி மற்றும் ரெடியான் கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட தகுந்த நிலங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** சுவிசேஷம் 7 கிராமங்களில் வாழும் 965 பேருக்கு முதல்முறையாகப் பறை சாற்றப்பட்டுள்ளது. பல்வேறு கிராமங்களில் 58 ஊழியப்பின்தொடர்பணி நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. ஆலயம் கட்டவும், அந்த ஆலயத்திற்கு தேவையான ஜூமர் ஒளி விளக்குகள் மற்றும் இசைக் கருவிகள் வாங்கவும் நமது விசுவாசிகளே உதாரத்துவமாகப் பொருளுதவியை நன்கொடையாக ஈந்துள்ளனர். மஜோட்டி, சுராத், பொகுதார், ஷோலி, ஷோப்தி, சிக்ஷா மற்றும் காஷா கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை கிறிஸ்துமஸ் பண்டிகை ஆராதனையில் எதிர்பாராதவிதமாக அநேக புதிய மக்கள் நம்மோடு வந்து கலந்துகொண்டதோடு, இயேசு இரட்சகரைக் குறித்த செய்தியை முதல்முறையாகக் கேட்டறிந்துள்ளனர். அதுமட்டுமல்லாமல், கிறிஸ்துமஸ் காலக் கட்டத்தில் தேவன் நமக்கு 59 புதிய தொடர்பாளர்களையும் தந்திருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரூபாலால் குடிப்பழக்கத்தி லிருந்து விடுதலையடையவும், தனது மனைவியை ஆலய ஆராதனையில் பங்கேற்பதற்கு அனுமதிக்கவும்; பித்தப்பைகல் பிரச்சினையினால் கஷ்டப்படும் ஆஷாவிற்கு நல்ல சுகமும், தீய ஆவியின் பிடியினால் அவதிப்படும் சரோஜிற்கு பூரண விடுதலையும் கிடைக்க; நமது ஜெபம் மற்றும் ஊழியச்செயல்பாடுகளின் மூலம் பணித்தளங்களில் திரளான ஆத்தும அறுவடை பெருக; நமது சபை வாலிபர்கள் தங்களது சபை ஒழுங்குகளுக்குக் கட்டுப் படவும், ஆவிக்குரிய வாழ்வில் ஸ்திரமாக வளரவும் ஜெபிப்போம்.

**2 பிப்ரவரி** வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆர்தர் ஜெபராஜ் A., திரு. பிரபாகர் N.
திருமதி. வசந்தராணி ஜார்ஜ்
திருமதி. ரோஷிலா மொசாஹாி
திருமதி. ஜாய்ஸ் ஷோபனா பொன் அகஸ்டின்
திரு. மர்கூஸ் மால்தோ R.
திருமதி. மணினி பெபர்த்தா அஸ்தாபன்
திரு. ஜோசப் கிருபாகரன் S.

## நேர்வா: S. இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

**துதிக்க:** அத்தல், பாரனு, பாங்கல் ஆகிய கிராமங்களில் கிறிஸ்துமஸ் ஆராதனை சிறப்பாக நடந்தேறியுள்ளன. மகர்சிங் பக்கவாத நோயிலிருந்து தேவ கிருபையால் சுகமடைந்துள்ளார். தனது நெடுநாள் பெலவீனத்தினிமித்தம் விசுவாசத்தை கைவிடும் நிலையிலிருந்த மனிஷா, நமது அத்தல் கிராம பெண்கள் கூடுகையில் கலந்துகொண்டதினிமித்தம், தனது வாழ்வின் சவால்களைச் சந்திப்பதற்கான மனபலத்தை மீண்டும் பெற்றுள்ளார். ஏற்றநேரத்தில் செய்யப்பட்ட சிறந்த அறுவைசிகிச்சையின் மூலம் கர்ப்பப் பையிலுள்ள கட்டி அகற்றப்பட்டு, கீதா பூரண சுகமடைந்துள்ளார். நல்ல தேர்தல் முடிவுகளை இம்மாநிலத்தில் தேவன் காணச்செய்திருப்பதற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தள விசுவாசிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் சபை கூடிவருதலின் ஆசீர்வாதத்தை உணர; தங்களது மகள் தனது இஷ்டப்படி திருமண வாழ்வை அமைத்துக்கொண்டதினால் மனவருத்தத்திலிருக்கும் ஷோபாராமின் குடும்பத்தார் கிறிஸ்துவில் மனஆறுதலும் திடநம்பிக்கையும் கொள்ள; பாரனு ஆலய விசுவாசிகள் கிரமமாக சபை ஆராதனைக்கு வந்து கலந்துகொள்ள; நமது சபை ஆராதனையை நடத்த இடமளித்துள்ள தரணி தேவி சிறுநீரகப்பிரச்சினையிலிருந்து சுகமடைய; நமது ஞாயிறுப்பள்ளி சிறுவர்கள் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் புத்துணர்வு பெறவும், தேவ வார்த்தையை ஆழமாய் புரிந்துகொள்வதில் வளர்ந்தேறவும்; சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டும் நமது விசுவாசி மோகன்லாலின் மனைவியும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## கர்சோக்: பவன் குமார் & பிரபாஷினி தேவி

**துதிக்க:** சுவிசேஷம் புதிதாக 50 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 5 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. ஒரு வேதாகமமும், 25 புதிய ஏற்பாடுகளும் தரப்பட்டுள்ளன. 8 இடங்களில் ஊழியப் பின்தொடர்பணிகளும், 2 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளன. பசந்த்பூர் மற்றும் கர்சோகில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் சிறப்பாக அரங்கேறியுள்ளன. மீரா ஜெபித்தபோது மூச்சுவிடமுடியாமல் திணறிக்கொண்டிருந்த பச்சிளம் பெண்குழந்தையொன்று இலகுவாக சுவாசிக்க ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்சோக் மற்றும் பசந்த்பூர் திருச்சபையினர் கிறிஸ்துவில் நன்கு வளர; தங்களது இனமக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற ஆத்தும பாரங்கொண்டு நமது சுதேச ஊழியர்கள் ஊழியத்தில் பணிசெய்ய; ஜெய்ராம் தனது நீதிமன்ற வழக்கிலிருந்து விடுபட்டு, நல்லதொரு வேலையில் பணியமர; இந்த நிதி யாண்டிற்கான ஆத்தும இலக்கை நமது ஊழியர்கள் ஜெபத்துடன் முயற்சி செய்து எட்டிட ஜெபிப்போம்.

3 பிப்ரவரி வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. முருகம்மாள் எஸ்தர் ஆல்பர்ட் பிரபாகரன்

# பஞ்சாப்

## சங்ரூர்: கிம்பால் திலீப்பாய்

**துதிக்க:** சுவிசேஷம் புதிதாக 1000 பேருக்கு பகரப்பட்டுள்ளதோடு, ஒரு கிராமத்தில் சுவிசேஷம் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 5 பேர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட்டு தேவ மந்தையில் இணைந்துள்ளனர். கிறிஸ்துமஸ் கீத பவனி மூலமும், கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் மூலமும் அநேகருக்கு சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. 10 வருடங்களாக விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்திருந்த டாக்டர். பிரீதம் சிங் தற்போது தனது வாழ்வை கிறிஸ்துவுக்கென மீண்டும் அர்ப்பணித்து, கிறிஸ்துவுக்குள் தனது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளார். நமது ஊழியர்கள் ஜெபித்தபோது பக்கவாதத்திலிருந்து தேவிந்தர் கௌருக்கு பூரண சுகம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்தை எதிர்க்கும் சீக்கிய சமுதாயத்தினர் இயேசுவின் அன்பால் தொடப்பட; இங்குள்ள விசுவாசிகள் யாவரும் தங்களது விசுவாசத்தில் உறுதியாயிருக்க; ஜெபிக்கும்போது மாத்திரம் செவிடாக மாறிவிடும் சோனுகௌருக்கு இருக்கும் பொல்லாத ஆவியின் கட்டு உடைய; ஷமான்பீட் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுபட; நீரிழிவு நோயினிமித்தம் படுக்கை யிலிருக்கும் சஷிபாலா ஷர்மா பூரண சுகமடைய ஜெபிப்போம்.

## புத்லாடா: ஹமோம் நாபா சிங் & துலந்தி ரியாங்

**துதிக்க:** சத்சங் கூடுகை மற்றும் கிறிஸ்துமஸ் கீத பவனி நிகழ்ச்சிகள் மூலம் 2000 பேருக்கு சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. 5 வேதாகமங்களும், 15 புதிய ஏற்பாடுகளும் பகிரப்பட்டுள்ளன. ஏழு இடங்களில் சத்சங் கூடுகைகள் கிரமமாக நடத்தப்பட்டுள்ளன. கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் புத்லாடா, பரேட்டா, தல்வாரி, மூணாக், குலானா ரோடு ஆகிய பகுதிகளில் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பரேட்டா, மூணாக் மற்றும் தல்வாரி பகுதிகளிலுள்ள மக்கள் சுவிசேஷத்தை வாஞ்சையுடன் கேட்க; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் பெண்கள் முகாம் ஆசீர்வாதமாக நடந்தேற; சஞ்ஜீவ் & மனிஷா தம்பதியருக்கு மழலைபாக்கியம் கிடைக்க; இயேசுத்திரைப்பட ஊழியம், சத்சங் நிகழ்ச்சிகள், வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் புதிய கிராமங்களில் நடத்த திறந்தவாசல் கிடைக்க ஜெபிப்போம்.

## ஜெபமீந்த நல்வாழ்வு!

*மத்தியப்பிரதேசம், குணா பணித்தளத்தில் உள்ள லாலாகேதா கிராமத்தைச் சேர்ந்த பன்தி பரேலா அருகிலுள்ள காட்டில் எரிக்கப்பயன்படுத்துவதற்கான மரத் துண்டுகளைச் சேகரிக்கும்போது, மரத்தடியொன்று அவருடைய வயிற்றில் விழுந்துவிட்டது. எனவே, அவருடைய வயிற்றின் உள்பகுதியில் அதிகமான இரத்தக்கசிவு ஏற்படத் தொடங்கியது. நிலைமையைக் கண்ட மருத்துவர்களும் நம்பிக்கையிழந்தனர். ஆனால், நமது விசுவாசிகள் ஒன்றுக்கூடி அவருக்காக ஊக்கமாக ஜெபித்தனர். ஜெபித்ததின் விளைவு அவர் அற்புதமாக உயிர் பிழைத்து, இன்று நலமாக இருக்கிறார். அல்லேலூயா!*

**4**
**பிப்ரவரி** சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜெபக்குமார் பெரியசாமி

# ஹரியானா

## தினேஷ்பூர்:

### ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** சுவிசேஷத்தினால் புதிதாக 80 பேர் சந்திக்கப்பட்டுள்ளனர். மற்றும் 2 பேர் புதிதாக விசுவாசிகளாகி, திருச்சபையில் இணைந்துள்ளனர். தேஜாஃபாயாவில் வைத்து நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் 300 பேர் பங்கேற்றுள்ளனர். ஆலய ஆராதனைக்கு இடம் கொடுத்துள்ள அவ்விடத்தின் சொந்தக்காரர் அங்கு கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியை நடத்த அனுமதிக்காதபோதிலும், அச்சபை விசுவாசிகள் தங்களது வீடுகளைக் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளை நடத்தத் திறந்து கொடுத்துள்ளனர். ஜெபத்தின்மூலம் பூஜாவிற்கு நல்ல வாழ்க்கைத்துணை அமைந்துள்ளது. பவனுடைய மனைவிக்கு தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை கிடைத்துள்ளது. இருதயக் கோளாறுக்காக எடுத்த சிகிட்சையினிமித்தம் மருத்துவக்கடன் அதிகமாகிக் கஷ்டப்பட்டுவந்த நாராயணனிற்கு தேவ கிருபையால் நல்ல சுகம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி காட்டு விலங்குகளின் தொந்தரவினால் தங்களது வீட்டு கால்நடைப்பிராணிகளை இழக்கக்கொடுத்து தவிக்கும் நமது ஸ்ரீலங்கா கிராம விசுவாசிகளுக்காக; சீமாவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க; காவல்துறையில் இணைய தேர்வு எழுதியுள்ள பிரியாவும், பங்கஜும் அத்துறையின் பணிக்கென தடையின்றி தேர்வு செய்யப்பட; முல்கீத்சிங் காசநோயிலிருந்து சுகமடைய ஜெபிப்போம்.

## பெஹோவா:

### போர்சத் பாபுபாய் & சரஸ்வதிபேன்

**துதிக்க:** சத்திய வசனம் பறைசாற்றப்பட்டதின்மூலம் புதிதாக 1250 பேர் கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். 2 பேர் புதிதாக விசுவாசிகளாகி, திருச்சபையில் இணைந்துள்ளனர். 170 புதிய ஏற்பாடுகளும், 4 வேதாகமங்களும் மக்களிடையே தரப்பட்டுள்ளன. 4 இடங்களில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் மிக அமர்க்களமாக நடந்தேறியுள்ளன. எல்சாவிற்கு ஏறெடுக்கப்பட்ட ஊக்கமான ஜெபத்தின்மூலம் அவருக்கு பேசும் திறனும், கேட்கும் திறனும் கிடைத்துள்ளன. ரோட்டஸ் மற்றும் சீமா தங்களது விசுவாசத்தில் கிறிஸ்துவுக்குள் நன்கு வளர்ந்து வருகின்றனர். ஜியோலு தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாவித்திரி கல்லீரல் நோய்த் தொற்றிலிருந்தும், சோமி முதுகு வலியிலிருந்தும் சுகமடைய; பூஜா மற்றும் சோனியாவிற்கு தகுந்த வாழ்க்கைத் துணைகள் அமைய; சிறைத் தண்டனையை அனுபவித்துவரும் சந்தீப் குமார் விரைவில் விடுதலையடைய; கமலேஷ் மற்றும் சுஷ்மா பொல்லாத ஆவிகளின் கட்டுகளிலிருந்து மீட்கப்பட; குல்லா, சீக்கா, துட்டியானா, கரோடி மற்றும் பாலியா கிராம மக்கள் யாவரும் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட ஜெபிப்போம்.

## 5 பிப்ரவரி ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அற்புதம் செல்வி விஜய்
திரு. தெய்வநாயகம் சாமுவேல்
திருமதி. அனுகாமி எக்கா ஜாஹர் சாய்
திரு. வெங்கட பிரவீன் குமார்

### தோஷம்:

**ஜாண் டேவிட்சன்**
**செல்வராஜ் & எஸ்தர்**

**துதிக்க:** சுவிசேஷம் 155 பேருக்கு கூறப்பட்டுள்ளது. 10 குடும்பங்களும், 3 தனிமனிதர்களும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி மூலம் நமது ஊழியத்தில் புதிய தொடர்பாளர்களாகக் கிடைத்துள்ளனர். வலிப்புநோயினால் வாயில் நுரைத்தள்ளி கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த விஜய் ஜெபத்தின்மூலம் நன்கு சுகமடைந்துள்ளார். போஜ்ராஜ் பகுதியில் பழைய வருட நன்றி ஆராதனையும், புதுவருட ஆராதனையும் மிக ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளது. ராஜ்நகர் பகுதியில் 40 விசுவாசிகளும், ஜீன்த் பகுதியில் சில விசுவாசிகளும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி சன்னியின் குடும்பத்தார் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள; தோஷம், பலவாஸ், போஜ்ராஜ் ஆகிய பகுதி விசுவாசிகள் எண்ணிக்கையில் பெருகி, திருச் சபைகளாக உருவாக; சத்தியத்திற்கு செவிகொடுப்போர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் தைரியமாய் அறிக்கையிட; கக்தா மற்றும் அவரது மகன், சீதாராம், பிரதாப், ராஜ்பால், ராம்பகத், தூப்சிங் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்தும், போதைப்பழக்கத்திலிருந்தும் விடுபட; ரோஹித் வலிப்பு நோயிலிருந்தும், ஜஷ்வந்த் மனநிலை பாதிப்பிலிருந்தும், விஜய் வாய்ப்பேச இயலாமைப் பிரச்சினையிலிருந்தும், அஜய் இருதயக் கோளாறிலிருந்தும் முழுமையான சுகமடைய ஜெபிப்போம்.

### ஜீவன் நகர்:

**அலியாக்கீம் ஜெனா & தீபிகா**

**துதிக்க:** சுவிசேஷ வசனம் 380 பேருக்கு பறைசாற்றப்பட்டுள்ளது. 135 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப் பட்டுள்ளன. 24 கிராமங்களில் ஊழியப்பின் தொடர்பணிகள் செய்யப்பட்டுள்ளன. 12 இடங்களில் சத்சங் கூடுகைகள் நடத்தப் பட்டுள்ளன. இங்கு 400 பேர் கலந்து கொள்ளும்வண்ணம் கிறிஸ்துமஸ் முந்தினநாள் ஆராதனையும், கிறிஸ்துமஸ் நாள் ஆராதனையும் மிகுந்த சமாதானமான முறையில் நடைபெற்று முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தபாவாலி திருச்சபையினர் மத்தியில் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாகவும், சிதறிப்போயிருக்கும் விசுவாசிகள் மீண்டும் ஒன்றுக்கூடி தேவனை ஆராதிக்கவும்; அதிகமான ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்படவும், நின்றுபோயிருக்கும் ஜெபக்குழுக்கள் மீண்டும் தொடங்கப்படவும்; பெண்கள் மற்றும் வாலிபர்களுக்கான ஊழியப் பயிற்சி நிகழ்ச்சிகள் விரைவில் துவங்கப்பட ஜெபிப்போம்.

**6 பிப்ரவரி** திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பெட்ரீசியா தமிழ் செல்வி குமார்
திரு. ஹமோம் நாபா சிங்

# உத்தராகண்ட்

## நானக்மட்டா:

**சிவகுமார் & சுசிலா மராக்**

**துதிக்க:** கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் 3 கிராமங்களில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன; அதில் 50 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். 2 புதிய குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு செவிகொடுக்கின்றனர். 5 கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதன் மூலம் 70 பேர் சுவிசேஷத்தை அறிந்துகொண்டதோடு, சுவிசேஷ கைப்பிரதிகளையும் பெற்றுச்சென்றுள்ளனர். மட்டிவா கிராம பல்வீந்தர் சாலைவிபத்தொன்றிலிருந்து தேவகிருபையால் அற்புதமாகக் காப்பாற்றப்பட்டுள்ளார். நமது விசுவாசி லக்விந்தர் துபாயில் நல்லதொரு வேலை கிடைக்கப்பெற்றுள்ளார். மற்றொரு விசுவாசி ரிங்கு தனது குடிப்பழக்கத்தி லிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் 9 வயது சிறுவனான ஹர்மன் சிங்கிற்கும், நடக்க முடியாத அளவிற்கு தொடர் கால்வலியினால் கஷ்டப்படும் நமது புதிய தொடர்பாளரான திரிலோக் சிங்கிற்கும் அற்புத சுகம் கிடைக்க; குடும்பப்பிரச்சினையினால் மனைவியை எரித்துக்கொன்றுவிட்ட மங்கத் சிங் மனந் திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ளவும், அவரது 2 குழந்தைகள் நல்லமுறையில் பராமரிக்கப்படவும்; நமது விசுவாசி நிஷா இரத்தப்போக்கு பிரச்சினையிலிருந்து பூரண குணமடைய ஜெபிப்போம்.

## மல்தன்சோர்:

**ஷிஷு பால் & அனிதா**

**துதிக்க:** புதிதாக 700 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் முதல் முறையாக சந்திக்கப்பட்டுள்ளன. 3 புதிய நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் தஞ்சமடைந்துள்ளனர். 60 புதிய ஏற்பாடுகளும், 6 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2 இடங் களில் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளும், 18 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகளும் சிறந்த முறையில் நடந்து முடிந்துள்ளன. 5 இடங்களில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. கீதா மற்றும் அனிதா தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தாரி மற்றும் பத்ராம்பர் பகுதி களில் செய்யப்பட்டுள்ள ஊழியங்களில் நல்வளர்ச்சி காணப்பட; போபூர்தாம் பகுதியில் நமது ஊழியத்திற்கு இடையூறு செய்யும் குருதுவாரி மக்கள் மனம் மாற; இங்கு அதிகமான ஆராதனைக்குழுக்கள் எழும்ப; ராம்நகர் மற்றும் பிருமதா பகுதிகளில் நமது ஊழியங்கள் விரிவு செய்யப்பட போடப்பட்டிருக்கும் திட்டங்களில் நமது ஊழியர்கள் வெற்றி காண; கீதா, அஞ்சலி, அனிதா பிசாரி, தேஜ்பால் மற்றும் பிரிகேஷ் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்க ஜெபிப்போம்.

**7**
**பிப்ரவரி** செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. துரைசாமி K. ஃபிரான்சிஸ்
திரு. பிரசாந்த் மீசாலா
திருமதி. பத்மாவதி நாராயண நாயக்
திருமதி. தனபுஷ்பம் அருள்ராஜ்
செல்வி. ஹெலன் மரியம் R.

# டெல்லி

## பட்பர்கன்ஜ்:

### P.G. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** சுவிசேஷம் 1146 பேருக்கு பகரப்பட்டுள்ளது. 6 பேர் கிறிஸ்துமஸ் பண்டிகை நன்னாளில் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். 78 புதிய ஏற்பாடுகளும், 18 வேதாகமங்களும் மக்களிடையே தரப்பட்டுள்ளன. 5 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் செய்யப் பட்டுள்ளன. 35 பேர் மத்தியில் தனித்தாள் ஊழியம் நடந்தேறியுள்ளது. ஒரு வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சியும், 75 வீடு சந்திப்புகளும் நல்லமுறையில் நடைபெற்று முடிந்துள்ளன. டெல்லி மற்றும் உத்தராகண்ட் மாநில விசுவாசிகளுக்கு முக்கிய தலைவர்களுக்கான பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. 15 நாட்களாக நடக்கமுடியாமல் பல மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த ஜோசப், நமது மிஷனரிகளுடைய ஜெபத்தின்மூலம் தற்போது நன்கு சுகமாகி நடக்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அரசாங்கத்தால் தடைசெய்யப் பட்ட சட்டவிரோதப் பொருட்களை விற்பனை செய்ததினால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் எபியும், சுதாவும் மனந்திரும்பி விடுதலையடைய; மூத்தவர்கள் மற்றும் படிப்பறிவில்லாத விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய 35 ஒலி வழி வேதாகமங்களின் தேவைகள் சந்திக்கப்பட; சஜ்வா நகர் பகுதி விசுவாசிகளுக்கு தேவனைக்கூடி ஆராதிக்கவும், சமுதாய நற் பணியாற்றவும் ஓர் ஆலயக்கட்டிடம் அமைய; கவிதா, விக்கி மற்றும் விமலா பித்தப்பைகல் பிரச்சினையிலிருந்தும், சுபாஷ், நிக்கிதா, சுரேஷ் ஆகியோர் வலிப்பு நோயிலிருந்தும் முழு சுகமடைய ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## கேர்வாடா:

### போயா தேவுபாய் & ஜாமுபேன்

**துதிக்க:** சத்திய வசனத்தை 270 பேர் முதல் முறையாகக் கேட்டுள்ளனர். 31 பேர் புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். சாகிர்சி என்ற புதியதொரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. ஹிராவாரா கிராமத்தில் எதிர்ப்புகள் மறைந் துள்ளன. ஷர்மிளாவிற்கு சுகப்பிரசவம் நேர்ந்துள்ளது. ஜெபத்தின்மூலம் 70 வயது சம்பாபேன் மனநோயிலிருந்து பூரண குண மடைந்துள்ளார். கௌதம், காலாஜி, முகேஷ், திரிலோக், பல்ஷங்கர் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களும் தாங்கள் கேட்டிருக்கும் சுவிசேஷத்திற்கிணங்கி, தற்போது நமது ஜெபக்கூட்டங்களில் தொடர்ச்சியாக வந்து பங்குப்பெறுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜெலனா மற்றும் ஹிராவாரா கிராமங்களில் நின்றுபோயிருக்கும் ஜெபக் கூட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட; இரத்தப்புற்றுநோயினால் பாதிக்கப் பட்டிருக்கும் அவினாஷிற்கும், இருதயக் கோளாறினால் அவதிப்படும் சோனுவிற்கும், கட்டிப்பிரச்சினையினால் கஷ்டப்படும் பசந்திக்கும், காசநோயினால் அல்லல்படும் முகேஷிற்கும் நல்ல சுகம் கிடைக்க; அடுத்த மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் சிறுவர் முகாம், வாலிபர் முகாம் மற்றும் தேடுவோர் முகாம் யாவும் சிறப்பாய் நடந்துமுடிய ஜெபிப்போம்.

## 8 பிப்ரவரி

புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சிபி செல்வின் சாம்
திருமதி. கவித் சுனிதாபேன் ரஷ்யாபாய்
திருமதி. ரேகா சாம்பியா

### உதய்பூர்:

**ஆஷிஷ் குமார் & சவிதா தேவி**

**துதிக்க:** சுவிசேஷ வசனம் 180 பேருக்கு பகரப்பட்டுள்ளது. 3 கிராமங்கள் தேவ வார்த்தையைக் கொண்டு புதிதாகச் சந்திக்கப்பட்டுள்ளன. 8 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். ஒரு தேடுவோர் முகாமும், 2 விசுவாசிகளுக்கான முகாம்களும் முறையே நடத்தப் பட்டுள்ளன. 5 கிராமங்களில் நடத்திய கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளில் ஆசிரியர்கள், கிராமத்தலைவர் மற்றும் திரளான கிறிஸ்துவை அறியாத ஜனங்கள் பங்கேற்றுள்ளனர். பாம்புக்கடியிலிருந்து சிறுவன் விவேக் காப்பாற்றப்பட்டுள்ளான். பாகாராம் வலிப்புநோய் மற்றும் தலைச் சுற்றல் பிரச்சினைகளிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றுள்ளார். கண்பார்வை யற்ற காலிபாயிற்கு 2 வருடங்களாக வராமலிருந்த அரசாங்க ஓய்வூதிய பணம் நிலுவைத்தொகையோடுகூட சேர்ந்து வர ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பீல் இனமக்கள் நமது விசுவாசிகளோடு இணைந்து கிறிஸ்துவில் வளர; மது, மாகு, லக்ஷ்மி ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுபட; ஜலாம், மனாக், ராகேஷ், தினேஷ் கசோட்டா ஆகியோர் தங்களது மனைவிகள் மற்றும் பிள்ளைகளைப்போல கிறிஸ்துவில் இரட்சிக்கப்பட; மக்வாஸ், ஓகனா, கிர்வா ஆகிய இடங்களில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

## உத்தரப் பிரதேசம்

### காட்டம்பூர்:

**ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்**

**துதிக்க:** கிறிஸ்துமஸ் பண்டிகை 7 இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டுள்ளதோடு, அதன்மூலம் 225 பேர் புதிதாக சத்தியத்தைக் கேட்டறிந்துள்ளனர். 12 இடங்களில் இரவுநேர உபவாச ஜெபக்கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. இப்பகுதியில் திட்டமிட்டு நடத்தப்பட்ட எதிர்ப்புச் சம்பவத்திலிருந்து விசுவாசிகள் நமது ஊழியரை எதிர்ப்பாளர்களின் தீயக்கரங்களுக்கு விலக்கிக் காப்பாற்றியுள்ளனர். நமது ஊழியர் களின் குடும்பங்களைப் பெரிய வியாதி பெலவீனங்களிலிருந்தும், பணக்கஷ்டங் களிலிருந்தும் நீக்கி தேவன் பாதுகாத்து வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின்மீது சரியான விசாரணையின்றி தவறாக கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களால் தொடுக் கப்படும் வழக்குப் பிரச்சினைகளிலிருந்து நமக்கு விடுதலை பிறக்க; இங்குப் பணிசெய்யும் நமது ஊழியர்களுக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்க; இத்தகைய எதிர்ப்பின் சூழ்நிலைகளின் மத்தியிலும் நமது சுதேச ஊழியர்களும் விசுவாசிகளும் தங்களது விசுவாசத்தில் திடமாய் நிலைத்திருக்கவும், தங்களது உறவினர்களை அவர்கள் கிறிஸ்துவண்டை கொண்டுவரவும்; நமது 6 ஆலயக்கட்டிடங்களும், அதற்கான ஒரு நிலப்பகுதியும் கான்பூர் மாநில நீதிபதி யால் தகுந்த முறையில் விசாரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட; நமது கிறிஸ்தவ திருச் சபைகளுக்கு அரசாங்க அதிகாரிகளின் கண்களில் தயவு கிடைக்க ஜெபிப்போம்.

## 9 பிப்ரவரி வியாழன்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெசிந்த் ஜோவன்னா ராமமுனி பிரசாத்
திருமதி. தீனா குமாரி பெபர்த்தா ஆஷாபிராப்தா
திருமதி. துர்கா தேவி @ ரூத் மேரி சங்கர் A.

### கோண்டா சிறுவர் விடுதி:
**ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா**

**துதிக்க:** தேவ வார்த்தையை 50 பேர் புதிதாக கேட்டுள்ளனர். நமது விடுதிப்பிள்ளைகள் கிறிஸ்துமஸ் பண்டிகையை மகிழ்ச்சியுடன் குறுநாடகங்கள் மற்றும் நடன நிகழ்ச்சிகளுடன் வெகு அமர்க்களமாகக் கொண்டாடியுள்ளனர்; இதில் உள்ளூர் விசுவாசிகளும், நமது விடுதிப் பிள்ளைகளின் பெற்றோர்களும் கலந்து கொண்டுள்ளனர். இக்கிறிஸ்துமஸ் நன்னாளை முன்னிட்டு அநேக புதிய நபர்களுக்கு வேதாகமங்களும், நமது விடுதிப்பிள்ளைகளுக்குப் புத்தாடைகளும் வழங்கப்பட்டுள்ளன. நமது விடுதி ஊழியப்பணியிலும், இப்பணித்தள ஊழியப்பணியிலும் தேவகரம் பெரிதாக இருந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருமணமாகி 8 வருடங்களுக்குப்பின் பிள்ளைப்பேறு பாக்கியமடைந்துள்ள நமது விசுவாசிகளான வித்யாராம் & அர்ச்சனாவிற்கு சுகப்பிரசவம் அருளப்பட; பதுவா, ஷம்புதாரா, தில்காய் மற்றும் குக்குர்புக்வா கிராமங்களில் நடைபெறும் ஊழியப்பணிகளின் மூலம் எண்ணற்றவர்களின் செவிகள் தேவ வார்த்தைக்குத் திறக்கப்படவும், அவர்கள் அதற்குச் செவிமடுக்கவும் ஆவியானவரின் ஒத்தாசை கிடைக்க; 10 மற்றும் 12-ம் வகுப்புகள் படிக்கும் நமது விடுதிப்பிள்ளைகள் தங்களது அரசு பொதுத்தேர்வுகளை நல்லமுறையில் எழுத; லக்னோ நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் நமது விடுதி நிலத்திற்கான வழக்கில் சுமூகமான தீர்வு கட்டளையிடப்பட; நமது விடுதிப்பிள்ளைகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் சிறந்த பாதுகாப்பும், பராமரிப்பும் கிடைக்க ஜெபிப்போம்.

### ரணியா:
**மாங்வெய் ஃபோம் & நிஷா**

**துதிக்க:** முதல்முறையாக 300 பேருக்கு சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. 2 இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்களும், 2 சிறுவர் கூட்டங்களும் மற்றும் 8 ஞாயிறு ஆராதனைகளும் கிரமமாக நடத்தப்பட்டுள்ளன. 12 இடங்களில் ஊழியப்பின் தொடர்பணிகள் செய்யப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் ஏற்ற சூழ்நிலைகள் இல்லாதபோதிலும் கிறிஸ்துமஸ் ஆராதனைகளும், நிகழ்ச்சிகளும் எவ்வித தடையுமின்றி கடந்த வருடங்களைக் காட்டிலும் இம்முறை திரளானோர் பங்குப்பெறும் விதத்தில் அழகாக நடந்தேறியுள்ளன; அதுமட்டுமல்லாமல், இங்குள்ள விசுவாசிகளே கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளுக்கான செலவுகளையும் சந்தித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புகளை எதிர்நோக்குவதற்கான தைரியத்தை நமது விசுவாசிகள் பெற; தேவ வார்த்தையைச் சத்தியமாகக் கேட்டிருப்போர் மனந்திரும்பி, இயேசுவை ஏற்றுக்கொள்ள; அனுராதா தீய ஆவியின் பிடியிலிருந்து தப்பிப்பிழைக்க; நமது விசுவாசிகளை ஆவிக்குரிய வாழ்வில் வளர்த்தெடுப்பதற்கும், வேத வசனத்தில் அவர்களை நிலைத்திருக்கப் பண்ணுவதற்கும் இங்கிருக்கும் 4 வேதாகம வகுப்புக்குழுக்கள் சீராகச் செயல்பட ஜெபிப்போம்.

**10**
**பிப்ரவரி** வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. சாலமோன் A.

## மத்தியப் பிரதேசம்

### குணா: சத்தீஷ் & ஷர்மிளா

**துதிக்க:** புதிதாக 7 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 450 பேர் முதல்முறையாக கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 2 இடங்களில் வாலிபர் கூடுகைகளும், 6 இடங்களில் சிறுவர் கூடுகைகளும் நடத்தப்பட்டுள்ளன. ராய்சிங் கொடிய விஷமுள்ள தேள்கடி தீங்கிலிருந்து அற்புத மாகக் காப்பாற்றப்பட்டுள்ளார். பிப்பாகேதி கிராம லொட்டு தீய ஆவியின் கட்டிலிருந்து ஜெபத்தின்மூலம் விடுவிக்கப்பட்டுள்ளார். காலாபானியில் வைத்து நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் 55 பேர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். மோகன்பூர் மையத்தில் வைத்து நடைபெற்ற அதிகாலை கிறிஸ்துமஸ் ஆராதனையில் கிட்டத்தட்ட 800 விசுவாசிகள் பங்கேற்று பயனடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிற மத வழிபாட்டுக் கலாச்சாரத் திலும் பங்கெடுக்கும் நமது சக்த்பூர் சபை விசுவாசிகளுக்குப் போதிய ஆவிக்குரிய தெளிவு கிடைக்க; ரோம கத்தோலிக்கச் சபை விசுவாசிகளுக்கும், நமது சபை மூப்பர்களுக்குமிடையே காணப்படும் பிரச்சினைகள் நீங்க; நமது சுதேச ஊழியர்கள் தங்களது விசுவாச வாழ்வில் மேலும் வளர; தனது மாடு தவறி கிணற்றில் விழுந்து இறந்ததற்குத் தண்டனையாக, 45 நாட்களாக கிராமத்தை விட்டு விலக்கி ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் குனிக்கு சீக்கிரத்தில் கிராம மக்களின் கண்களில் தயவு கிடைக்க ஜெபிப்போம்.

### *கிராமத்தலைவர் மூலம் கிடைத்த தேவ கிருபை!*

*மத்தியப்பிரதேசம், பாக்லி பணித்தளம். கடந்த டிசம்பர் 24-ம் தேதி அங்குள்ள ஒரு கிராமத்தலைவரிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அதில் "இன்று கிறிஸ்தவ எதிர்ப்பாளர் கூட்டமொன்று நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? என்பதைப் பார்க்க வருகிறார்கள்" என்ற செய்தி வந்தது. இச்செய்தி அப்பணித்தளம் முழுவதும் பரவத்தொடங்கியது. அதைக்கேட்டதும் நமது ஊழியர்கள் அனைத்து விசுவாசிகளையும், சுதேச ஊழியரையும் ஊக்கமுடன் கூடி ஜெபிக்க அழைப்பு விடுத்தனர். உடனே முக்கிய விசுவாசிகளும் சபை தலைவர்களும் கூடி ஜெபித்ததோடு, அக்கிராமத்தலைவரின் வீட்டிற்கும் சென்றனர். அங்கே அவர்களுக்கும் கிராமத்தலைவருக்குமிடையே வாக்குவாதம் எழும்பியது. பின்பு இறுதியாக நமது விசுவாசிகள் கிராமத்தலைவரிடம், தாங்கள் செய்துகொண்டிருக்கும் ஊழியப்பணியை அவர் வந்து பார்க்க வேண்டுமெனவும், யாதொரு கிறிஸ்தவ எதிர்ப்பாளரையும் அவர்கள் பகுதிக்கு அவர் அனுப்பக்கூடாதெனவும் கேட்டுக்கொண்டனர். அவர்கள் கேட்டுக்கொண்டபடியே அக்கிராமத்தலைவர் அதற்கு சம்மதம் தெரிவித்து, அவர்கள் பகுதியில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்த கையெழுத்திட்டு அனுமதியளித்தார். தேவ கிருபையால் அப்பணித்தள விசுவாசிகள் யாவரும் எல்லா வருடங்களைக் காட்டிலும் சிறந்த முறையில் இவ்வருட கிறிஸ்துமஸ் மேளாவைக் கொண்டாட தேவன் அனுக்கிரகம் ஈந்தார். அல்லேலூயா!*

## 11 பிப்ரவரி சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பினயகுமார் குரு

## கர்கோன் / கோகாவ்:

**பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா**

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருப்பதினால், 770 பேர் இயேசுவைக் குறித்து முதல் முறையாகக் கேட்டறிந்துள்ளனர். 8 கிராமங்களில் ஊழியப்பின்தொடர் பணிகள் செய்யப்பட்டுள்ளன. 6 புதிய நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். தேவ்ஜிரி மற்றும் சிலோட்டியா கிராமங்களில் நமது விசுவாசிகளால் வெகு சிறப்பாக நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளில் 800 பேர் கலந்துகொண்டுள்ளனர். விஷமருந்தி மரணவிளிம்பில் போராடிக் கொண்டிருந்த காலு அற்புதமாகப் புது வாழ்வு பெற்றுள்ளார். மகிமந்திலி கிராம ஜெபக்கூட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. தனது பெற்றோரைக் கிறிஸ்தவக்கூட்டங்களுக்குச் செல்ல விடாமல் தடைசெய்துவந்த கணேஷ், தற்போது நமது ஜெபக்கூட்டங்களில் தானாகவே வந்து கலந்துகொள்கிறார். ஜெபத்தின் விளைவாக 30 வயது லட்கு தனது மனநிலை பாதிப்பிலிருந்து அற்புத சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லால்சிங், ரோஷன், குன்சிங், பகிரத், கஜ்ரூ, பப்லு ஆகியோர் குடிப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று மீண்டும் நமது ஆலய ஆராதனைகளில் வந்து பங்கேற்க; புதிதாக ஓர் ஆலயம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொக்ரணியா கிராம மக்களில் சிலர் மனந்திரும்ப; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, தங்களது மனைவிகளை ஜெபக்கூட்டங்களுக்கு வரவிடாமல் தடுக்கும் கஜ்னா, சுனில், ஜபால்சிங் ஆகியோர் மனந்திரும்பி, இயேசுவை ஏற்றுக்கொள்ள; சந்தபால்பட்டு கிராமத்தில் மீண்டும் ஜெப ஆராதனை தொடங்கப்பட; சில்லா, மங்லி, பொர்கா, ராணி ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட; மாந்திரீக சக்திகளினால் பயத்திற்குள்ளாகியிருக்கும் பியார்சிங் கிறிஸ்துவில் விசுவாசங்கொண்டு அப்பயத்திலிருந்து மீள; சிலோட்டியா கிராமத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நற்செய்தியின்மேல் ஆர்வம் காட்டும் கிறிஸ்துவை அறியாத திரளான மக்களில் சிலர் கிறிஸ்துவின்மீது விசுவாசம் கொள்ள ஜெபிப்போம்.

### அதிசய வாழ்வு!

*ஹரியானா, கய்த்வால் மாவட்டம், பெஹோவா பணித்தளத்தைச் சார்ந்த இளம் பெண்ணான கிரேஸ், ஓர் குத்துச்சண்டை வீராங்கனை. இவர் 13-வது இடத்தில் ஹரியானா மாநிலத்தின்கீழும், பிற மாநிலங்களின் கீழும் போட்டியிட்டுப் பல பதக்கங்களைப் பெற்றுள்ளார். இவருக்கு திடீரென அவருடைய மூளைப்பகுதியில் வலி ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். அங்கு அவர் மரித்துவிட்டார் என அறிவிக்கப்பட்டதினால், பிரேத பரிசோதனைக்கான ஆயத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும் நமது விசுவாசிகள் அவருக்காக தேவனிடம் போராடி ஜெபித்துக்கொண்டிருந்தபோது, என்ன ஆச்சரியம்! மரித்த அந்த வீராங்கனை மீண்டும் உயிர்பெற்றார். இதைவிட பெரியக்காரியம் என்னவெனில், இந்த அதிசயத்தைக் கேள்விப்பட்ட 10 குடும்பத்தினர் தங்களது வாழ்வை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்துள்ளனர். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!*

## 12 பிப்ரவரி ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜீவரத்ன பீரோ
திரு. ரோஞ்ஜய் நர்சாரி

### டப்ரா:

**சத்திகந்த் பரிச்சா & சகரிகா**

**துதிக்க:** கிறிஸ்துமஸ் ஆராதனைகள் 7 வெவ்வேறு திருச்சபைகளில் முறையே நடத்தப்பட்டுள்ளன; இதில் ஏறத்தாழ 100 பேர் புதிதாக கலந்துகொண்டு சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். மரணப்போராட்டத்திலிருந்த ஸ்ரிபாவிற்கு தேவ கிருபையால் புதுவாழ்வு கிடைத்துள்ளது. சோட்டுவும், அவரது குடும்பத்தினரும் இயேசுவைக் குறித்து அறிந்துகொள்வதில் மிகுந்த நாட்டம் காட்டிவருகின்றனர். இங்குள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்களின் கோஷத்தை அடக்கி, நமது ஊழியத்தை வளர்ச்சியின் பாதையில் கொண்டுச் செல்வதற்கு தேவன் காண்பித்து வருகின்ற கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிரேம் நகர் பகுதி ஆலயக்கட்டு மானப்பணி விரைவில் முடிவடையவும், சுல்தான்பூர் ஆலயக்கட்டுமானப்பணி சீக்கிரத்தில் தொடங்கப்படவும்; நமது நயகோவா ஆலயத்தின் சுற்றுச்சுவர் கட்டுவதற்கான அனுமதி அதற்குரிய அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப்பெற; அமர்புரா கிராம ஷிம்மா இரவுநேர பயத்தி லிருந்து விடுபட; பிஜ்பூர், அமர்புரா, டப்ரா ஆகிய பகுதிகளைச் சார்ந்த நமது புதிய விசுவாசிகள் தங்களது விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிக்கை செய்ய; பிதர்வா மற்றும் டப்ரா கிராமங்களில் ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கும் 2 புதிய வேதாகம வகுப்புக்குழுக்கள் தடையேதுமின்றி தொடங்கப்பட; நமது தன்னார்வ ஊழியர் களான அத்தால், விஷால் மற்றும் சந்தீப் தங்களது ஊழியச்செயல்பாடு களில் நல்வளர்ச்சியடைய ஜெபிப்போம்.

### பாக்லி:

**D. வில்சன் & ரஷ்மித்தா பரிடா**

**துதிக்க:** முதல்முறையாக சுவிசேஷ நற்செய்தி 350 பேருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. புதிதாக 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 25 விசுவாசிகள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் தைரியமாக அறிக்கை யிட்டுள்ளனர். அம்பஜ்ஹறத் கிராமத்தில் ஆராதனைக்குழுவொன்றும், பலசியா கிராமத்தில் திருச்சபையொன்றும் தொடங்கப்பட்டுள்ளன. இங்கு நடந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் சுமார் 400 பேர் கலந்துகொண்டதில் 150 பேர் புதியவர்கள். எந்தப்பிரச்சினையுமின்றி போரி கிராமத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாடு வதற்கு அக்கிராமத்தலைவர் கொடுத்த அனுமதிச் சான்றிதழ் மிகவும் பயனுள்ள தாக அமைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் தங்களது தீங்கான திட்டங்களையும், தீயச் செயல்பாடுகளையும் விட்டுவிட; ருக்மா, சுக்மா ஆகியோர் குருட்டாட்டம் பிடிக்க வைக்கும் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுபட; சஞ்ஜய் தீய ஆவியினிமித்தம் கட்டிவைக்கப் பட்டிருந்த சங்கிலிக்கட்டிலிருந்து விடுபட்டிருந்தாலும், கிறிஸ்துவில் முழுமை யான விடுதலையைப் பெற ஜெபிப்போம்.

## 13 பிப்ரவரி திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்டெல்லா பிரபுதாஸ்
திரு. சஞ்சீப் குமார் ஆண்ட்ரப்
திருமதி. கம்புங் தாபா சுசாவ்
திருமதி. வயலட் ஹன்ஸ்தா
திருமதி. குர்பிரீத் கௌர் குல்தீப் சிங்

# ஜார்க்கண்ட்

## தீன்பஹாட் & பகையா:

### ஜெபக்குமார் & பொன்லதா

**துதிக்க:** பகையா பணித்தளத்தில் வைத்து நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் மற்றும் புதுவருட பண்டிகை ஆராதனைகள் அங்குள்ள விசுவாசிகளுக்கு மிகப்பெரிய ஆசீர்வாத மாக அமைந்துள்ளது. பய்சா கிராமத்தில் வைத்து நடந்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் அக்கிராம பஞ்சாயத்துத்தலைவர் தானாகவே வந்து கலந்துகொண்டது, அங்குள்ள நமது விசுவாசிகளுக்குப் பெரும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது. 24 புதிய நபர்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். பகையா பணித்தளத்தில் 750 விசுவாசி களையும், தீன்பஹாட் பணித்தளத்தில் 250 விசுவாசிகளையும் தேவன் நமக்கு தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது பணித்தளப்பயிற்சியை நிறைவு செய்து, தற்போது ஜான்சியிலுள்ள நமது ஊழியப்பயிற்சி மையத்திற்கு மேலும் ஒருவருட மிஷனரிப்பயிற்சியைப் பெறச்சென்றுள்ள நமது புதிய ஊழியச் சகோதரிகளான ஜெயந்தி மற்றும் ஆர்த்திக்காக; மதன்காசி கிராமத்தில் கட்டப்பட்டுவரும் ஆலயக்கட்டுமானப் பணிக்கு தேவையான தண்ணீர் வசதிகள் கிடைக்கப்பட; விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வருவதற்கு பரிசுத்த ஆவியானவரின் அனுக்கிரகம் கிடைக்க; 10-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு எழுதவிருக்கும் நமது ஊழியரின் மகன் ஷெர்வினுக்காக ஜெபிப்போம்.

## பர்ஹர்வா:

### கிரிஷான் குமார் & சாந்திலால்

**துதிக்க:** சுனில் ரவிதாஸ், லுக்னிதேவி, அர்ஜுன்குமார், சோனியா ஆகியோர் புதிதாக ஆராதனைக்கு வரத் தொடங்கி யுள்ளனர். இப்பணித்தளத்தில் 3 நாள் உபவாச ஜெபக்கூடுகையொன்று சிறந்த முறையில் நடந்து முடிந்துள்ளது. இரவுநேர ஜெபக்கூட்டங்கள், வீடு சந்திப்புகள், ஞாயிறுப்பள்ளி வேதாகம வகுப்புகள், பெண்கள் கூடுகைகள், தன்னார்வ ஊழியர் மற்றும் சபை மூப்பர்களுக்கான பயிற்சி வகுப்புகள், கிராம சபை கமிட்டி கூட்டங்கள், வெள்ளிக்கிழமை உபவாச ஜெபக்கூடுகைகள் மற்றும் பெண்கள் ஜெபக்குழுக்கள் யாவும் பல்வேறு கிராமங்களில் கிரமமான முறையில் நடைபெற்று வருகின்றன. பல்லாவ் குப்தா தைராய்டு பிரச்சினையிலிருந்தும், சோனி & சூரஜ் இரத்தப்போக்கு பிரச்சினையிலிருந்தும், மேலும் பல விசுவாசிகள் பாம்புக்கடிகளிலிருந்தும் அற்புதமாக விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பட்டுதாஜ்ஹீல் கிராம தெபந்தி தேவி மூட்டுவலிப்பிரச்சினையிலிருந்தும், இரத்தினி தேவி நோய்த்தொற்றிலிருந்தும், பட்டாசி தேவி பக்கவாதத்திலிருந்தும், ஸ்ரீராம் மரபணுநோயிலிருந்தும், முகுல் சாஹா முதுகுத்தண்டுவட நரம்பு பிரச்சினையிலிருந்தும் சுகமடைய; ஆபிரகாம் ரவிதாஸின் குடும்பத்திலுள்ள நிலப்பிரச்சினை நீங்க; வேலையில்லாத தினால் குடும்பங்களை விட்டு தேசத்தின் பல்வேறு இடங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ளவர்களுக்காக ஜெபிப்போம்.

## 14 பிப்ரவரி செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லால் நுன் மவி மார் கிப்கென்

### ஹன்ஸ்டிகா: செந்தில் குமார்
### தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** சுவிசேஷம் 13 கிராமங்களில் அறிவிக்கப்பட்டுள்ளதின் விளைவாக, 1080 பேர் புதிதாக கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். மகாராம் பயத்தின்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, தற்போது நமது ஆராதனையில் வந்து தொடர்ச்சியாகப் பங்கேற்கிறார். குளிர்கால சூழ்நிலையையும் பொருட்படுத்தாது, நமது அனைத்து விசுவாசிகளும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு ஆராதனைகளில் வாஞ்சையுடன் பங்கேற்றுள்ளனர். வேதவாசிப்பிற்கென அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் திட்டத்தின் மூலம் அநேகர் மிகுந்த பயனடைந்து வருகின்றனர். நமது விசுவாசிகள் அவர்களுடைய சபையிலுள்ள பிறருக்காக ஜெபிக்கும்பொழுது, அவர்களது ஜெபத்தைக் கேட்டு தேவன் பதிலளிப்பதைக் குறித்து நமது விசுவாசிகளே சாட்சி பகருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாக இருக்கும் தல்கானி, ஜல்பி, சர்க்கரா, பனியா ஆகிய கிராமங்களைச் சார்ந்த சில குடும்பங்களுக்காக; நமது விசுவாசிகளே தங்களது உறவினர்களையும் குடும்ப நபர்களையும் தேடிச்சென்று, அவர்களுக்கு இயேசுவைக்குறித்து சொல்லி, அவர்களையும் கிறிஸ்துவண்டை வழிநடத்த; விபச்சார பாவத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் சுனிராம் அப்பாவத்திலிருந்து முழுமையான விடுதலை பெற; நமது விசுவாசிகள் தங்களது கிராம திருவிழா நாட்களில் தீயச்செயல்களில் ஈடுபட்டு, தேவ நாமம் தூஷிக்கப்பட இடங்கொடாதிருக்க; பனியா கிராமத்தில் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிடக் காத்திருக்கும் 3 குடும்பத்தாருக்கு எத்தீங்கும் நேரிடாமலிருக்க; நமது விசுவாசிகள் ரோம கத்தோலிக்க நம்பிக்கை கொள்கைகளில் சிக்கி, நமது வேத விசுவாசக் கொள்கைகளிலிருந்து விலகிவிடாமல் இருக்க ஜெபிப்போம்.

### அமரபாடா:
### வியாசு பாபு & சௌந்தர்ய ரேகா

**துதிக்க:** சுவிசேஷத்தினால் 9 கிராமங்களைச் சேர்ந்த 3800 புதிய மக்கள் சந்திக்கப்பட்டுள்ளனர். 5500 சுவிசேஷ கைப்பிரதிகளும், 38 வேதாகமங்களும் தரப்பட்டுள்ளன. 10 இடங்களில் கிறிஸ்துமஸ் ஆராதனைகள் மிக நேர்த்தியாகக் கொண்டாடப்பட்டுள்ளன. 20 பேர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். பாகுமுனி முர்மு சமைக்கும்போது ஏற்பட்ட தீ விபத்திலிருந்து அற்புதமாகக் காப்பாற்றப்பட்டுள்ளார். 14 இடங்களில் வெளிப்புற சந்திப்பு இரவுநேர கூட்டங்களும், 29 இடங்களில் ஆவிக்குரிய முகாம்களும் பல்வேறு வகை சார்ந்த மக்களுக்குக் கிரமமாக நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறிய அளவில் கட்டப்பட்டுவரும் பிசன்பூர் கிராம ஆலயக்கட்டுமானப்பணி துரிதமாக முடிவடைய; இப்பணித்தளத்தில் காணப்படும் தீய சக்திகளுக்கு மாறாக தேவ வல்லமை புலப்பட; மந்திரி முர்மு & பூவந்தி ஹன்ஸ்தா, சாலமோன் மராண்டி குடும்பம், பப்லு பஸ்கி குடும்பம், ரிச்சர்ட் குடும்பம் ஆகியோருக்கு குழந்தை பாக்கியங்கள் கிடைக்க; தனிஷ் டுடு தீய ஆவியின் கட்டிலிருந்து விடுதலை பெற; குபின் சோரேன் காசநோயிலிருந்தும், ஜேக்கப் மற்றும் ஹோப்பன்மோய் பக்கவாதத்திலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

**15 பிப்ரவரி** புதன்
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேனியல் தாமஸ்
திருமதி. மெர்சி தெபோரா செந்தில்
திரு. வசாவா எலேஷ் பிரபு, திரு. அய்யனார் M.

## கோபிகந்தர்:
### ஜாண் தினேஷ் & பின்னி ஞானம்

**துதிக்க:** கடந்த வருட ஊழியப்பாதையில் தேவனுடைய வழிநடத்துதலும், பாது காப்பும் நமது ஊழியர் குடும்பத்திற்கு நிறைவாகக் கிடைத்துள்ளது. பிப்ரா சபையில் கொண்டாடப்பட்ட கிறிஸ்துமஸ் ஆராதனையில் 16 திருச்சபைகளைச் சார்ந்த விசுவாசிகள் தங்களது கலாச்சார நிகழ்வுகளுடன் அவ்வாராதனையை நன்கு சிறப்பித்துள்ளனர். மோகுல்பானா பணித்தளத்திலிருந்து 2 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தையில் தஞ்சம் புகுந் துள்ளனர். 10 கிராமங்களில் ஊழியப்பின் தொடர்பணிகள் செய்யப்பட்டிருப்பதோடு, அதன்மூலம் 113 பேர் முதல்முறையாக சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். இப்பணித்தளத்திற்கு ஒலிபெருக்கி சாதனங்கள் வாங்குவதற்கான தேவைகள் யாவும் சந்திக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சரீரசுக ஆசீர்வாதம் பெற்று, தற்போது விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்துள்ள துக்ரான் தெகிரி மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்க; காசநோயினால் மரிக்கும் தருவாயிலிருந்து சுகமடைந்துள்ள சிபு தெகிரியும், அவரது குடும்பத்தினரும் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் தைரியமாக அறிக்கையிட; பூல்மணி மஹாராணியின் கணவரும் மகனும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கவும், அவருக்கு கால்வலியிலிருந்து நற்சுகம் கிடைக்கவும்; சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் மனந்திரும்பவும், விசுவாசத்தில் நல் வளர்ச்சி காணவும்; நமது இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளான ஆட்லின் மற்றும் ஆல்வினா ஆவிக்குரிய வாழ்வில் தகுந்த பக்குவமடைய ஜெபிப்போம்.

## சந்தால் சாஹிப்கஞ்ச் பிராந்தியம்:
### ஜீவன் ரஞ்சன் & சினிக்தா

**துதிக்க:** பெல்தியா, சன்ஜுடி மற்றும் ஹரியாலா பகுதிகளில் 3 ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 2 வருடங்களுக்குப்பிறகு இப்போது பிராந்திய சபை மூப்பர்களுக்கான குடும்ப ஐக்கியக் கூடுகை மற்றும் வாலிபர் கூடுகை சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளன. நடத்தப்பட்ட வாலிபர் கூடுகையில் 1000-க்கும் மேலா னோர் பங்கேற்றதில் 63 பேர் தங்களது வாழ்வை தாங்கள் இருக்குமிடங்களில் கிறிஸ்துவுக்கென ஊழியர்களாகப் பணியாற்றவும், 20 பேர் கலாச்சாரம் கடந்து ஊழியர்களாகப் பணியாற்றவும் அர்ப்பணித்துள்ளனர். எல்லா திருச் சபைகளிலும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடந்ததோடு, அதில் நமது விசுவாசிகள் தங்களது உறவினர்களையும் அழைத்துவந்து பங்கேற்று, அதை மேலும் சிறப்புறச் செய்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 2030-க்கான தொலைதூரத் திட்டமாக 17 இலட்ச சந்தால் இனமக்களைச் சுவிசேஷத்தின்மூலம் சந்திப்பதற்கும், 200 ஆலயங்களைக் கட்டுவதற்கும் எடுத்திருக்கும் தீர்மான இலக்குகளை நமது ஊழியர்கள் ஜெபத்துடன் மிகுந்த பிரயத்தனம் பண்ணி எட்டிட; வெளிப்புற சந்திப்பு ஊழியத்தை அதிக பிரயோஜனமுள்ளதாய் செய்திட ஒரு ஜீப்பும், 40 சிறிய எல்.சி.டி. விளக்குகளும், 40 ஒலிப்பெருக்கி சம்பந்த மான பொருட்களும் கிடைக்க; தங்களது சொந்த இனமக்களைச் சுவிசேஷத்தினால் சந்திப்பதற்கு நமது ஒவ்வொரு திருச்சபை விசுவாசிகளும் முனைப்புடன் செயல்பட ஜெபிப்போம்.

16 பிப்ரவரி வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பொன்லதா ஜெபக்குமார்

திரு. சதீஷ் குமார் C.

# மேற்கு வங்காளம்

## தபன்:

### R. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** தேவ ஒத்தாசையால் 50 வீடு சந்திப்புகளும், 7 கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. 700 பேர் புதிதாக சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். 20 பேர் விசுவாச மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். நமது விசுவாசிகள் தங்களது உறவினர்களையும், நண்பர் களையும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளுக்கு வரவழைத்ததின் மூலம் ஏராளமானோர் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். சாபித்ரு மூர்முவுக்கு ஆதார் மற்றும் பள்ளி சான்றிதழில் இருந்த பிழைகளை இலகுவாக சரிபடுத்துவதற்கு தேவன் கிருபை செய்ததால், அதற்கு அவர் நன்றி காணிக்கையாக ரூ.500/-ஐ ஆலயத்திற்குக் கொடுத்துள்ளார். கவிதா டுடு, சம்பா மராண்டி, மனுவேல் சோரேன் ஆகியோர் தங்களது பல் வேறு சரீர பெலவீனங்களிலிருந்து சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பொல்லாத ஆவிகளின்மீது கொண்டுள்ள பயத்தால் பாதிக்கப்பட்டுள்ள சுனிதா சோரேன் அப்பயத்திலிருந்து விடுவிக்கப்பட; பாகா முர்மு நரம்பு பிரச்சினையிலிருந்தும், பிட்டியா பக்கவாதத்திலிருந்தும் சுகம் பெற; சுனில் பஸ்கி, நரேஷ் சோரேன், தோரா கிஸ்கு, பிமல் கிஸ்கு மற்றும் ரபி ஹஸ்தக் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; கணேஷ் வாய்ப்புற்றுநோயிலிருந்து அற்புத சுகமடைய; சுரேஷ் டுடு மற்றும் அவரது குடும்பத்தினர் பழைய கசப்பான அனுபவங்களை மறந்து மீண்டும் தங்களை முழுநேரப்பணிக்கென அர்ப்பணிக்க ஜெபிப்போம்.

# அஸோம்

## கோகாமுக்:

### பிரவீன் தாஸ் & மார்கிரெட்

**துதிக்க:** ஆயன்ஸ்ரீ கிராமத்தில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இயேசுத்திரைப்பட ஊழியத்தின் மூலம் 285 பேருக்கு சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. 5 கிராமங்களில் கிறிஸ்துமஸ் கீத பவனி ஆராதனை நடத்தப்பட்டுள்ளது. 3 கிராமங்களில் பெரிதளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. 16 பேருக்கு தனித்தாள் ஊழியம் மூலம் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. 2 பழைய ஏற்பாடுகளும், 155 புதிய ஏற்பாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசியான லாலா மிசோங் தனது முழு குடும்பத்தாருக்கும் கிறிஸ்துவை அறிவிக்க; மோகன்பெகு, உனே மிசோங் மற்றும் பொர்மானந்தோ குடிப்பழக்கத்திலிருந்து மீள; பொர் மானந்தோ பெகு, தோரா பெகு, நிஜுல் பெகு மற்றும் ரூமியின் குடும்பம் விசுவாச வாழ்விற்குள் வர; பீனா பெகுவிற்கு கருப்பை நீர்க்கட்டி நீங்க ஜெபிப்போம்.

## 17 பிப்ரவரி வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ருஹாமா குரு
செல்வி. வன்கலபுடி சாந்தினி

### ஜெங்குராய்முக் (வட மஜுலி):

**ரபீந்திர முர்மு & செலினா மராண்டி**

**துதிக்க:** சத்திய வசனத்தை 250 பேர் முதல்முறையாகக் கேட்டுள்ளனர். 114 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. புதிய பணித்தளத்தில் நமது ஊழியர்கள் சிறப்பாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 9 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளதோடு, இரவுநேர ஆவிக் குரிய கூடுகையொன்றும் நடத்தப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருமணமாகி 5 வருடங்கள் ஆகியுள்ள நமது ஊழியர் தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களின் பார்வைக்கு அவர்கள் விலக்கிக் காக்கப்படவும், ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் 5 ஆத்துமாக் களையாவது கண்டெடுக்க வேண்டும் என்ற இலக்கை அவர்கள் அடையவும்; நமது சுதேச ஊழியர்கள் தங்களது இனமக்கள்மீது ஆத்தும பாரங்கொண்டு ஊழியங்களில் செயல்பட ஜெபிப்போம்.

## ஒடிசா

### டேங்கானல்:

**சந்து மராண்டி, சுரேஷ் மால்தோ**

**துதிக்க:** புதிதாக 13 கிராமங்களைச் சார்ந்த 314 பேருக்கு சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. அநேக மாதங்களாக குடற்புண்காய்ச்சலினால் கஷ்டப்பட்டு வந்த பிஷ்ணுடிகல் மற்றும் குருபாரி பூபூங்கா ஜெபத்தின்மூலம் அற்புத சுகம் பெற்றுள்ளனர். பல கிராமங்களில் சபை மூப்பர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் முறையே நடத்தப்பட்டுள்ளன. 5 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்ப்பணி செய்யப்பட்டு, புதிய மக்கள் திரளானோர் வரும்நாட்களில் கிறிஸ்துவின் மந்தையில் இணைவார்கள் என நமது ஊழியர்கள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். 6 புதிய நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் வந்து சேர்ந்துள்ளனர். பசாய்பட்டோ திருச்சபையில் புதிய ஆலயக் கமிட்டியொன்றும், புதிய சபை மூப்பர்களும் உருவாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹரிதபாடா மற்றும் குட்டுசாஹி கிராமங்களிலுள்ள நமது புதிய விசுவாசிகளை அவர்கள் கிறிஸ்தவர்களானதின் பொருட்டு குடிதண்ணீர் எடுக்கவிடாமல் தடுக்கும் அவர்களது கிராம மக்கள் யாவரும் மனந் திரும்ப; 6 மாதங்களுக்கு முன்பிருந்தே பக்கவாதத்தினால் அவதிப்படும் மகந்தி குன்கல், பிறவியிலிருந்தே நடக்க முடியாமல் படுக்கையிலிருக்கும் சகோதரிகளான சில்கி சோரேன் மற்றும் ஸ்ரீமதி சோரேன் அற்புத சுகமடைய; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் விசுவாசிகள் முகாம், கிராம சபை கமிட்டி கூட்டம், வட்டாரப்பகுதி சபை கமிட்டி கூட்டம், இயேசுத்திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகள், வீடு சந்திப்புகள், ஆத்தும ஆதாயப் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகள் யாவும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

**18**
**பிப்ரவரி** சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. தேஜஸ்விட்டா பெபர்த்தா
திரு. சுகின்லால் C.

## கியோன்ஜர்கட்: பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா

**துதிக்க:** சுவிசேஷத்தினால் 16 கிராமங்களைச் சார்ந்த 987 பேர் புதிதாகச் சந்திக்கப்பட்டுள்ளனர். பல்வேறு கிராமங்களில் 30 இரவுநேர ஜெபக்கூட்டங்களும், உபவாச ஜெபக்கூடுகைகளும், பெரிதளவிலான வெளிப்புற சந்திப்பு கூடுகைகளும் மற்றும் பெண்கள் கூடுகைகளும் நடத்தப்பட்டுள்ளன. 17 புதிய நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். மமல போஷி சபையைச் சார்ந்த ஜனோ முண்டா, திம்ரியா கிராமத்தைச் சார்ந்த நமிதா பூர்த்தி ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். 3 வயது சிறுவனான காந்தே பூர்த்தி இரத்த வாந்தி பிரச்சினையிலிருந்து ஜெபத்தின் மூலம் அற்புத சுகம் பெற்றுள்ளான். பல்லகாரா விடுதிப்பிள்ளையான ஆதி முண்டாவிற்கு ஜெபத்தினால் இடுப்புப்பிசகல் பிரச்சினையிலிருந்து பூரண சுகம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியப்பணிகளை எதிர்த்துவரும் சந்து முண்டா, உமா முண்டா, பப்லி முண்டா, சாபித்திரி முண்டா, திகி முண்டா மற்றும் 10 பேர் மனந்திரும்ப; இப்பணித்தளத்தில் பணிபுரிய ஊழிய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்கள் கிடைக்கவும், ஏற்கனவே பணிபுரிந்துகொண்டிருக்கும் சுதேச ஊழியர்களின் குடும்பங்களை தேவன் வல்லமையாக எடுத்து பயன்படுத்தவும்; பிறவியிலிருந்தே காதுகேளாமலும் வாய்ப்பேச முடியாமலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற சுபாய் முண்டாவிற்கு அற்புத சுகம் கிடைக்க; கிறிஸ்துவை அறியாதோர் இரட்சிக்கப்பட; கல்லீரல் மற்றும் சிறுநீரகக் கோளாறுகளினிமித்தம் அவதிப்படும் விசுவாசிகளுக்காக; நமது தன்னார்வ ஊழியரின் மனைவியான சந்துமுனி முண்டாவிற்கு சுகப்பிரசவம் நேரிட ஜெபிப்போம்.

## ஜஷிப்பூர்: சுகின்லால் & ஜெயராணி; அரவிந்த் குமார், ஆபிரகாம்

**துதிக்க:** கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் 21 பேர் புதிதாக இணைந்துள்ளனர். சிரகுட்டு கிராம நமது புதிய விசுவாசியான மய்னா சோரேன் மூளை மலேரியா காய்ச்சலிலிருந்து அற்புத சுகம் பெற்றதினால், அவரும் அவரது குடும்பத்தைச் சார்ந்த 10 பேரும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். நமது விடுதிப்பிள்ளைகளுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் கல்விப்பயில வாய்ப்பு கிடைத்துள்ளது. நமது விடுதிப்பிள்ளைகளுக்கு ஒருநாள் ஆவிக்குரிய கூடுகையொன்று நடத்தப்பட்டுள்ளது. தேவ ஒத்தாசையாலும், துணைக்கல்வி பயிற்சியாளரின் உதவியாலும் நமது விடுதிப்பிள்ளைகள் நன்கு கல்விப்பயின்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் 3 கிராமங்களில் புதிதாக நடக்கவிருக்கிற வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளுக்காகவும், 21 விசுவாசிகள் திருச்சபையில் இணையவிருக்கிற நிகழ்ச்சிகளுக்காகவும்; நமது திருச்சபையினருக்கு எதிராக எழும்பியிருக்கும் பதிஜோரி கிராம மக்கள் மனந்திரும்ப; நமது விடுதிப்பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்விற்காக; இவ்விடுதிப்பிள்ளைகளுக்கு நல்ல விடுதிப்பொறுப்பாளர் கிடைக்க; ஹோ இனமக்கள் மத்தியில் ஆவிக்குரிய எழுப்புதல் உருவாக; நமது விடுதிப்பிள்ளைகள் பள்ளிக்குச் செல்ல தேவையான 4 சக்கர வாகனமொன்று கிடைக்க; இக்குளிர்கால சூழ்நிலையில் நமது விடுதிப்பிள்ளைகளின் சரீர ஆரோக்கியம் முழுவதுமாய் காக்கப்பட ஜெபிப்போம்.

**19 பிப்ரவரி** ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. அன்புமலர் பாலமுருகன்

# குஜராத்

## பாவ்நகர்:

**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** பெண்கள் கூடுகையொன்று இங்குச் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. பாடி மற்றும் பாவ்நகர் ஃபுல்சார் கிராமங்களிலுள்ள 40 பேர் சுவிசேஷத்தைக் கேட்டிருக்கின்றனர். புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. உபவாச ஜெபக் கூடுகை மற்றும் வெள்ளிக்கிழமை ஆராதனைகள் எத்தடையுமின்றி நடந்து முடிந்துள்ளன. 2 விசுவாசிகளின் வீடுகளில் வீட்டு ஜெபக்கூட்டங்கள் மிக ஆசீர்வாதமான முறையில் நடத்தப் பட்டுள்ளன. 4 கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் சிறப்பாக நடந்தேறியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வேலைக்கென பிற இடங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்றிருக்கும் நமது விசுவாசிகள் கிறிஸ்தவ விசுவாசத்தையும், நற் சாட்சியுள்ள வாழ்க்கை தரத்தையும் விட்டுவிடாதிருக்க; இரகசியமாகக் கிறிஸ்துவை விசுவாசிக்கும் பெண்கள் தங்களது விசுவாசத்தை துணிவுடன் அறிக்கை செய்ய; தின்ஜிபாய் வங்கிக் கடனுதவியைப் பிரச்சினையேதுமின்றி இலகுவாகப் பெற; திபக்சௌக் பகுதியைச் சார்ந்த நம்ரதாபேன் தனது பாவங்களை அறிக்கையிட்டு, குடும்பத்துடன் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்க ஜெபிப்போம்.

## சொரம்பா:

**புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா**

**துதிக்க:** புதிதாக 103 பேர் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளனர். ரன்வேரி கிராமத்தில் புதியதொரு ஐக்கிய கூடுகை தொடங்கப்பட்டுள்ளது. வேந்தர்தேவி கிராமத்தில் ஓர் ஆலயத்தின் கட்டுமானப்பணி துவங்கப்பட்டுள்ளது. பின் மாற்றமடைந்திருக்கும் விசுவாசிகள் மீண்டும் ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளனர். குஜராத்தின் புதிய அரசாங்கத்தில் 5 கிறிஸ்தவர்கள் இடம் பெற்றுள்ளதால், இன்றுவரை சுவிசேஷத்திற்கு அங்கு திறந்தவாசல் இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாக இருப்போர் தைரியமாக அறிக்கையிட; 150 ஆத்துமாக்களைக் கண்டெடுக்க வேண்டும் என்ற இலக்கு சாத்தியப்பட; போதை மற்றும் குடிப்பழக்கங்களுக்கும், தற்கொலை எண்ணங்களுக்கும் அடிமைப்பட்டிருப்போர் விடுவிக்கப்பட; ரன்வேரி கிராம விபுல்சிங் விபத்தினால் உண்டான கொடிய காயங்களிலிருந்து பூரண குணமடையவும், கந்தோலி சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்து சுகமடையவும் ஜெபிப்போம்.

**20 பிப்ரவரி** திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. குண சந்திர பயக்

திரு. ஜாண்சன் V.

**உமர்காம்:**

**ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா**

**துதிக்க:** சுவிசேஷம் 220 பேருக்கு சென்றடைந்துள்ளது. 15 புதிய ஏற்பாடுகளும், 5 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. தேர்தல் சமயத்தில் நமது விசுவாசிகள் தேவ கிருபையால் பிரச்சினைகள் ஏதுமின்றி பாதுகாக்கப்பட்டுள்ளனர். நமது சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளும், மூப்பர்களுக்கான கூடுகைகளும் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. மலாவ், போராவ், விகல்வாடா ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வசனம் பறைசாற்றப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிந்தர், தல்வாடா, விகல்வாடா மற்றும் ஜெரோலி கிராமங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் இரவுகூட்டங்கள் அனைத்தும் எந்தத் தடையுமின்றி நடைபெற; இந்த நிதியாண்டிற்கான ஊழிய இலக்குகளை அடைந்திடவும், இந்த ஆத்தும அறுவடைப்பணியில் நமது விசுவாசிகளும் உற்சாகமாக இறங்கிச் செயல் ஜெபிப்போம்.

# தாத்ரா & நகர் ஹவேலி

**சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்**

**துதிக்க:** சுவிசேஷத்தின் மூலம் 620 புதிய நபர்கள் சந்திக்கப்பட்டுள்ளனர். 39 பேர் புதிதாக கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். 9 இடங்களில் நடந்த தலைவர்கள் கூடுகையில் 584 பெண்கள் கலந்து கொண்டுள்ளனர். வல்சந்த் கிராமத்தில் ஆலயக்கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2 வருடங்களாக செய்து வந்த ஊக்கமான ஜெபத்தினால் ரசிலாபேன் தனது வயிற்றுவலியிலிருந்து பூரண சுகம் பெற்றுள்ளார். தன்னை விட்டுப்பிரிந்து சென்ற கணவருக்காக ரதிபேன் 4 மாதங்களாக தொடர்ந்து ஜெபித்த ஜெபத்தின் மூலம் தற்போது இருவரும் இணைந்து வாழ்கின்றனர். திருமணமாகி 5 வருட காத்திருப்பு ஜெபத்திற்குப்பின் ஹேமாபேன் தற்போது மகப்பேறு பாக்கியமடைந்துள்ளார். போன்தா, துத்னி, ஒரோலி ஜங்கிள், கொலந்தா, மோடிபட்டி ஆகிய இடங்களில் கிறிஸ்துமஸ் ஆராதனை எவ்வித தடையுமின்றி அழகாக நடந்தேறியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கல்பனாபேனிற்கு கட்டி நீக்கப்பட்டு, நல்லதொரு குழந்தை பாக்கியம் கிடைக்க; மாருபேன் பக்கவாதத்திலிருந்து சுகம் பெற; நடக்கவிருக்கும் வாலிபர் முகாம்கள் மூலம் அநேக வாலிபர்கள் நிரம்ப ஆசீர்வதிக்கப்பட; சந்தோஷ் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; ஊழியத்தை முடித்துவிட்டு வீடு திரும்பும்போது ஏற்பட்ட விபத்தினாலுண்டான காயத்திலிருந்து சய்னாபேன் விரைவில் குணமாக ஜெபிப்போம்.

**21 பிப்ரவரி** செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. திலக் S.

## மகாராஷ்டிரா

### முக்காடா: M. சங்கர் & ஆனந்தி

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி பகரப்பட்டிருப்பதின் விளைவாக, 500 பேர் புதிதாக கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். 31 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். மனுமத், கரோலி, கருவால் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. நமது கடாதிபாடா கிராம விசுவாசிகளுக்கு அரசாங்கத் திட்டத்தின்மூலம் இலவச வீடுகள் கிடைக்கப்பட்டுள்ளன. நந்துகாவ் கிராமத்திலிருந்து 250 பேரும், போஷிரா கிராமத்திலிருந்து 1500 பேரும் அங்கு நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளனர். சிறுவர் பராமரிப்பு மையப் பிள்ளைகள் மற்றும் வாலிபர்களுக்கு அவர்களது தனிப்பட்ட வாழ்வில் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை மேற்கொள்ள நல்லாலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. கோஷ் சவர்பாடாவில் வைத்து விசுவாசிகளுக்கென நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சியின் மூலம் 20 பேர் ஆவிக்குரிய நற்பயனடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சக்ரி கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கான நிலப்பதிவேடுகள் யாவும் நேர்த்தியாக ஆயத்தம் செய்யப்பட; இப்பணித்தள ஊழியத்தில் ஆராதனை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கென அர்ப்பணமுள்ள தன்னார்வ ஊழியர்கள் கிடைக்க; குடி, தீயப்பழக்கவழக்கங்கள் மற்றும் மாந்திரீக செயல்களுக்கு அடிமைப்பட்டிருக்கும் மக்கள் அப்பாவ அடிமைத்தனங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு, கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; 6 வயது சிறுவனான சந்திரகாந்த் காதுகேளாமை பிரச்சினையிலிருந்தும், கல்பனா மனவளர்ச்சி குன்றிய பிரச்சினையிலிருந்தும் அற்புத சுகம் பெற ஜெபிப்போம்.

### எட்டப்பள்ளி: வசாவே அர்விந்த் காலுசிங் & வால்வி எஜு

**துதிக்க:** கிறிஸ்துமஸ் ஆராதனை 10 வெவ்வேறு இடங்களில் நடைபெற்றதின் விளைவாக சுமார் 1000 பேர் சுவிசேஷத்தை முதல்முறையாகக் கேட்டுள்ளனர்; அதில் 23 பேர் விசுவாசிகளாக மாறியுள்ளனர். 600 சுவிசேஷ கைப்பிரதிகளும், 10 வேதாகமங்களும் இவ்வாராதனை நேரங்களில் பகிரப்பட்டுள்ளன. கெதா பகுதியில் பெரியளவு வெளிப்புற சந்திப்பு கூடுகையொன்றும், ஹலேவாரா கிராமத்தில் சிறுவர் முகாமொன்றும் நல்லமுறையில் நடைபெற்று முடிந்துள்ளன. உபவாச ஜெபத்தின்மூலம் மனநிலை பாதிப்பிலிருந்து சுகமடைந்துள்ள ஏசுதாஸ் தற்போது நமது ஆலய ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பன்து ஹிச்சானி தனது விசுவாசத்தில் வழுவாது ஆவிக்குரிய வாழ்வில் உறுதியாக வளர; கன்னிமகா புற்றுநோயிலிருந்தும், சம்மா நரோட்டி மனநோயிலிருந்தும் சுகமடைய; இங்குள்ள அநேக வாலிபர்களுக்கு தெய்வ பயத்துடன்கூடிய நல்ல வாழ்க்கைத் துணைகள் அமைய; குடிப்பழக்கத்திற்குள்ளாகியிருக்கும் நமது புதிய தொடர்பாளர்கள் அதிலிருந்து பூரண விடுதலை பெற; மர்கால் கிராமத்தில் நடைபெற்றுவரும் ஆலயக்கட்டுமானப்பணி தடையின்றி நடைபெற; வாட்டிகட்டா மற்றும் காட்சூர் கிராமங்களில் ஆலயக்கட்டுமானப்பணிகள் தொடங்கப்பட; இப்பணித்தள விசுவாசிகள் தேவ வார்த்தையின்மூலம் இயேசுவில் இன்னும் அதிகம் விசுவாசம் கொள்ள ஜெபிப்போம்.

**22 பிப்ரவரி** புதன்
*உபவாச ஜெபநாள்*

## சாலீஸ்காவ்:
### திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி

**துதிக்க:** உமர்கேத் மற்றும் தியோலி கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டு, அதன் மூலம் 750 பேர் முதல் முறையாக சத்தியத்தைக் கேட்டுள்ளனர். வீட்டு ஜெபக்கூட்டங்கள் நடத்தவும், மராட்டி மொழியில் சுவிசேஷ கைப் பிரதிகள் மற்றும் 25 வேதாகமங்களை விநியோகிக்கவும் நமது ஊழியர்களுக்கு தேவன் கிருபை செய்துள்ளார். 9 பேர் புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள் ளனர். 2 இடங்களில் ஒழுங்குச்செய்யப் பட்டு நேர்த்தியாக நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளில் 290 பேர் பங்கேற்று பயனடைந்துள்ளனர். முகேத் என்ற பகுதியில் விசுவாசிகள் முகாமும், முக்கிய தலைவர்கள் கூடுகையும் வெற்றிகரமாக நடத்தப்பட்டு, அதில் 30 பேர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இக்குளிர்காலங்களில் தொழிலினிமித்தம் இடம்பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகளின் குடும்பப் பாதுகாப்புக்காகவும், அவர்களது வாழ்வின் அடிப்படை தேவைகள் யாவும் சந்திக்கப்படவும்; இப்பணித்தளத்தில் விசுவாசிகள் கூடி ஆராதிப்பதற்கு ஆலயம் கட்ட தகுந்ததோர் நிலம் கிடைக்க; கோபால் பக்கவாதத்திலிருந்தும், ஆர்த்தி காது பிரச்சினையிலிருந்தும், சுரேகா மற்றும் அஸ்வினி மூலப்பிரச்சினையிலிருந்தும் முற்றிலுமாய் சுகம் பெற; இப்பணித்தள ஊழியத்தை இன்னும் விரிவாய்ச் செய்வதற்கு நல்லதொரு சுதேச ஊழியர் கிடைக்க ஜெபிப்போம்.

## அக்கல்குவா:
### ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டதின் விளைவாக 625 பேர் முதல்முறையாக இயேசுவைக்குறித்து கேள்விப் பட்டுள்ளனர். 2 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தையில் விருப்பத் துடன் இணைந்துள்ளனர். மொரம்பா, தபரியாம்பா, ரத்தன்பாடா ஆகிய கிராமங்களில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் மிக ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளன. இப்பணித்தளத்தைச் சார்ந்த பல்வேறு இல்லங்களில் முதல்முறையாக கிறிஸ்துமஸ் கீத பவனி செல்ல தேவன் தந்தருளியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சத்திய வசனத்தைப் புதிதாகக் கேட்டிருப்போர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஷர்மிளா பாய், பங்திபாய் மற்றும் சந்தோஷ் இரத்த அணு கோளாறிலிருந்து முழு சுகமடைய; பியூஸ், மனேஷ், பிரதீப் ஆகியோர் புகையிலைப்பழக்கத்தி லிருந்து மீள; வரும்நாட்களில் நடக்க விருக்கும் இரவுநேர ஜெபக்கூடுகை களும், 3 இடங்களில் உபவாச ஜெபக்கூடுகைகளும், 2 இடங்களில் பெரியளவு வெளிப்புற சந்திப்பு கூடுகை களும் மிகுந்த ஆசீர்வாதமாய் நடந்து முடிய; நமது ஊழியத்தில் தேவ வார்த்தையை வல்லமையாய் எடுத்துப் பயன்படுத்த பரிசுத்த ஆவியானவரின் உதவி ஊழியர்களுக்குக் கிடைக்க ஜெபிப்போம்.

**23 பிப்ரவரி** வியாழன்

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஐசக் ராஜா D.
திரு. செந்தில் குமார் தீமோத்தேயு
திருமதி. அனிதா பிரபா ஆனந்தகுமார்
திருமதி. ஈமண்டி அனுராதா பங்காரு

## மொல்கி / நர்மதா:

**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** முதல்முறையாக 4 கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கச் சென்றதின் விளைவாக, 600 பேர் சத்தியத்தைப் புதிதாகக் கேட்டுள்ளனர். 6 பேர் புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்துள்ளனர். திரையிடப்பட்ட இயேசுத்திரைப்படத்தை 25 பேர் கண்டு பயனடைந்துள்ளனர். 9 இடங்களில் பெண்கள் முகாம் நடத்தப் பட்டுள்ளது. பிஜிரிகாவ், பர்குந்த், மட்டியா பாரி மற்றும் கிக்தாபாரி கிராமங்களில் சிறுவர் வேதாகம வகுப்புகள் முறையே நடத்தப்பட்டுள்ளன. கிக்தாபாரியில் வாலிபர் முகாமொன்று நடத்தியதில் 30 வாலிபர்கள் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். வெளிப் புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் நடத்தப் பட்ட கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் 650 விசுவாசிகளும், 400 கிறிஸ்துவை அறியாதவர்களும் கலந்துகொண்டுள் ளனர். நர்மதா பணித்தளத்தில் முதல் முறையாக ஒரு திருமணத்தை கிறிஸ்தவ முறையில் நடத்திட தேவன் ஈந்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது தொழிலினிமித்தம் குஜராத் மாநிலத்திற்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள்மீது தேவ காவல் தங்கியிருக்க; தேல், மட்டியாபாரி, விட்லாபாரி, வேல்காதி மற்றும் பர்குந்த் கிராமங்களில் நடை பெற்றுக்கொண்டிருக்கும் ஆலயக்கட்டு மானப்பணிகள் விரைவில் முடிவடைய; சமாரியா இயேசுவை இரட்சகராக ஏற்க; கிருபையாக நம்மிடத்திற்கு மீண்டும் திரும்பிவந்துள்ள கத்ரிபட்டில்பாடா திருச்சபையினர் மத்தியில் தனது வீட்டில் வைத்துதான் ஆலய ஆராதனை நடத்தப்பட வேண்டும் என்று பிரச்சினை செய்யும் சபை மூப்பரொருவர் மனம் மாற ஜெபிப்போம்.

## *சிகிச்சையற்ற சுகம்!*

*மகாராஷ்டிரா, போரடி பணித்தளம். அபசிங்பாடா கிராம ராணிபாய் சுகவீனமாகி, மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். அப்போது அவருடைய அருகில் யார் சென்றாலும் பயங்கர மாகச் சத்தமிட்டு அவர்களை அவர் அடிக்க ஆரம்பித்தார். அதனால் மருத்துவர் சிகிச்சை கொடுப்பதை நிறுத்தி விட்டார். பின்பு நமது சபை மூப்பர்கள் அவருக்காக ஜெபிக்க மருத்துவமனைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களுடன் நமது மிஷனரிகளும் சேர்ந்து ஜெபித்து, அவரது குடும்பத்தினரிடம் இயேசுவின்மீது நம்பிக்கை வைக்குமாறு ஆலோசனை கூறி, இயேசு நிச்சயம் அவரைச் சுகப்படுத்துவார் என உறுதியளித்தனர். பின்னர் அவர்கள் வீடு சென்று சேரும் முன்பே அவர் சுகமடைந்தார் என்ற செய்தியைக் கேட்கும்படி தேவன் கிருபை செய்தார். கடந்த நாட்களில் நடந்து முடிந்துள்ள கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் அற்புத சுகமடைந்த ராணிபாய் கலந்து கொண்டார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## 24 பிப்ரவரி வெள்ளி

### வத்ஃபாலி:
### பிதுயூத் குமார் சிங், ஏபேல் ஹெம்ரோம்

**துதிக்க:** 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் புதிதாகச் சந்திக்கப்பட்டுள்ளன. 7 பேர் கொண்ட குழுவாக நடைபெற்றுவரும் வேதாகம வகுப்புப் பயிற்சி நிகழ்ச்சியொன்று தொடர்ச்சியாக நடந்து வருகின்றது. கொனிஜி குஜராத் பகுதியில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் 230 பேர் கலந்துகொண்டு கிறிஸ்துமஸ் ஆராதனையை மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடியுள்ளனர். 150 பேர் புதிதாக விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். இரவுநேர ஜெபக்கூடுகைகளும், ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகளும், சிறுவர் வேதாகம வகுப்புகளும் பல்வேறு இடங்களில் கிரமமாக நடைபெற்றுள்ளன. எல்லா ஊழியக்கூடுகைகளும் தங்குத் தடையின்றி நடைபெற காவல்துறை மற்றும் கிராமத்தலைவரின் அனுமதிகள் கிடைக்கப்பெற தேவன் பாராட்டியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முதல்முறையாக சத்தியத்தைக் கேட்டிருப்போர் இயேசுவின்மீது விசுவாசம் கொள்ள; கடந்த 3 வருடங்களாக தீய ஆவியின் பிடியினுள் சிக்கித்தவிக்கும் சம்பா அற்புத விடுதலை பெற; தொடர்ச்சியாக சத்தியத்தைக் கேட்டுவந்தும் கிறிஸ்துவை விசுவாசிக்க மறுக்கும் கடின உள்ளங்கள் மனந்திரும்ப; குஜராத்திற்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் கிறிஸ்தவ விசுவாசத்திலும், நற்சாட்சியுள்ள வாழ்விலும் நிலைத்து நிற்க; வத்ஃபாலி சபையைச் சார்ந்த சபை மூப்பர்கள் சுவிசேஷத்தைப் பறைசாற்றுவதில் முனைந்துச் செயல்பட; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்துவரும் நமது ஊழியர்கள் இருவருக்கும் தேவன் தாமே தகுந்த நேரத்தில் ஏற்ற வாழ்க்கைத் துணைகளை ஈந்து, அவர்கள் தொடர்ந்து குடும்பமாகக் கர்த்தருக்கென ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

### போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** இயேசுவைக் குறித்த நற்செய்தி 1100 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 4 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப் பட்டுள்ளது. 23 பேர் கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் இணைந்துள்ளனர். ஒரு வேதாகமமும், 10 புதிய ஏற்பாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. 3 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணி செய்யப்பட்டுள்ளது. கிறிஸ்துமஸ் கீத பவனியின் மூலம் ஏறத்தாழ 800 பேருக்கு சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. விசுவாசிகளுக்கான இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகளும், பெண்கள் முகாம்களும், சிறுவர் முகாம்களும் மற்றும் பஜன் நிகழ்ச்சிகளும் முறையே நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உமர்தாவில் கட்டத்தொடங்கியிருக்கும் ஆலயக்கட்டுமானப்பணி துரிதமாய் நடைபெற; பூலாபாய் நெஞ்சு வலியிலிருந்தும், தருணாபாய் தோல் ஒவ்வாமை பிரச்சினையிலிருந்தும், மகிந்தர் பக்கவாதத்திலிருந்தும், சுனில் இளம்பிள்ளை வாதத்திலிருந்தும், ரவி கண்பார்வையற்ற நிலையிலிருந்தும் பூரண சுகமடைய; சுராமல்பாய் குடிப் பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.

## 25 பிப்ரவரி சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஏஞ்சல் ஜெபா ஹென்றி
திருமதி. சுப்ரா பாக் மிண்டு குட்டும்
திருமதி. சாரதி அருண்குமார், திருமதி. சுமதி கணேஷ்
திருமதி. நீத்து தினேஷ் குமார்
திரு. ஸ்டீபன் ஹன்ஸ்தா

# கர்நாடகா

### கானாப்பூர்: வினயராஜ் & சாந்தா

**துதிக்க:** கிறிஸ்துவின் மந்தைக்குள் புதிதாக 3 பேர் அடியெடுத்து வைத்துள்ளனர். கிறிஸ்துமஸ் ஆராதனைகளும், அவைகளைச் சார்ந்த பிற நிகழ்ச்சிகளும் எந்தப் பெரிய பிரச்சினையுமின்றி நல்ல முறையில் நடந்து முடிந்துள்ளன. ஜீப் மூலம் ஊழியப்பின்தொடர்பணி சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது. சில புதிய தொடர்பாளர்களிடம் கன்னட மொழி வேதாகமங்கள் பகிரப்பட்டுள்ளன. வீடு சந்திப்புகள் மற்றும் கூட்டு தொலைபேசி அழைப்பு ஜெபங்கள் யாவும் நமது விசுவாசிகளை அவர்களது ஆவிக்குரிய வாழ்க்கையில் அதிகம் பெலப்படுத்தி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருச்சபைகள் யாவும் சுயேட்சையாக இயங்க; கானாப்பூர் ஆலயச் சுற்று வளாகச்சுவர் கட்டும்பணி சீக்கிரத்தில் செய்து முடிக்கப்பட; கானாப்பூர் மற்றும் நந்தகடா சபை விசுவாசிகள் நன்கு சகோதர ஐக்கியத்தில் வளர ஜெபிப்போம்.

### முன்ட்கோட்:
### சுனில் குமார் & சங்கீதா

**துதிக்க:** சுவிசேஷம் 500 பேரைச் சென்றடைந்துள்ளதோடு, பல கிராமங்களிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. 25 வேதாகமங்களும், 6 புதிய ஏற்பாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. பாலபீடி மற்றும் இந்திரா நகர் பகுதிகளில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நன்கு நடந்துள்ளன. வாழ்வாதார அடிப்படை தேவைகளுக்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஷாமிற்கு அரசாங்கத்திடமிருந்து கால்நடை பிராணியான பசுமாடு ஒன்று உதவியாகக் கிடைக்கப்பட்டுள்ளது. சரோஜா பெண்ணியப்பிரச்சினையிலிருந்து சுகம் பெற்றுள்ளார். தேவேந்திரா மற்றும் பிரகாஷின் குடும்பங்கள் புதிதாக ஆலய ஆராதனைகளுக்கு வருகை தர ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பில்லிசூனியம் மற்றும் சிலை வழிபாடுகளில் நம்பிக்கையுள்ளோர் அப்பற்றுகளிலிருந்து விடுதலையடைய; நய்னா குழந்தை பாக்கியம் பெற; தங்களது விசுவாசத்தை அறிக்கையிடக் காத்திருக்கும் 5 பேர் கிறிஸ்துவில் நன்கு வளர; சங்கீதா காலிலுள்ள கட்டியிலிருந்து சுகமடைய ஜெபிப்போம்.

## *சவாலின் மத்தியிலும்!*

*ஜார்க்கண்ட், தீன்பஹாட் பணித்தளம். தனது கிராமத்தினர் கோவில் பூஜைக்கென பணங்கேட்டபோது தர மறுத்ததால், கிராமத்தை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மதன்காசி கிராம நமது விசுவாசியான சொப்பன் கல்கோ ஆலயம் கட்டுவதற்காக தனது நிலத்தை நன்கொடையாகக் கொடுத்துள்ளார். கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக ஆலயம் அலங்கரிக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது அவருடைய பக்கத்து வீட்டாரின் மகன் பிசாசுப்பிடியினால் அலைக்கழிக்கப்பட்டான். ஒருவராலும் அவனுக்கு உதவிசெய்ய முடியவில்லை. இதைக் கண்ட நமது விசுவாசிகள் ஒன்றுக்கூடி ஜெபித்ததினால், தேவன் அவனுக்கு விடுதலை தந்தார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!*

**26 பிப்ரவரி** ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுரேஷ் ஜோசப்

## கோலார்:

### சாமுவேல் பெபர்தா

**துதிக்க:** சீப்பூர் கிராமத்தில் நடைபெற்றுவரும் ஆலயக்கட்டிட சீரமைப்புப் பணிகள் யாவும் சிறந்த முறையில் நடந்துகொண்டிருக்கின்றன. ஆலய சீரமைப்புப்பணி நடைபெறும் இடத்தில் ஏற்படவிருந்த பாம்புக்கடி விபத்திலிருந்து தேவன் நமது ஊழியரை அற்புதமாகப் பாதுகாத்துள்ளார். நமது விசுவாசியொருவரின் மகள் காயத்ரிக்கு நல்லதொரு வாழ்க்கைத்துணை அமைந்துள்ளது. கிறிஸ்துமஸ் கீத பவனிமூலம் நமது ஊழியத்தில் 12 புதிய குடும்பங்கள் கிடைக்கப்பட்டுள்ளன. ராணிக்கு செய்த அறுவை சிகிச்சை ஆபத்தின்றி நன்மையாக முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஏ.கே. பகுதியில் நடைபெற்று வரும் நமது ஊழியங்களில் எழுப்புதல் உருவாகவும், அதன்பொருட்டு அங்கே இருக்கும் கௌடா மற்றும் கார்கர் இனமக்களில் அதிகமானோர் கிறிஸ்துவில் இரட்சிப்பின் அனுபவம் பெறவும்; உஷாம்மா, ரோஜா, ஷிவானி ஆகியோருக்கு சுகப்பிரசவங்கள் நேரிட; இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ள முஸ்லீம் நபரான நதீம் உண்மையான தேவனைப் பற்றிக்கொள்ள; சுகமில்லாதிருக்கும் நமது ஊழியரின் தாயார் விரைவில் நற்சுகமடைய ஜெபிப்போம்.

## ஷிக்காவ்:

### சுனில் குமார் & சங்கீதா

**துதிக்க:** 10 கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி பகரப்பட்டதின் விளைவாக, 1500 பேர் புதிதாக கிறிஸ்துவைக்குறித்து அறிந்துள்ளனர். ஒரு புதிய நபர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளார். 1000 சுவிசேஷ கைப்பிரதிகளும், 5 வேதாகமங்களும், 6 புதிய ஏற்பாடுகளும் மக்கள் மத்தியில் கொடுக்கப்பட்டுள்ளன. துனசி, சாவ்னூர், ஷிக்காவ் ஆலயங்களில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடந்தேறியுள்ளன. இதில் ஏராளமான உள்ளூர் கிராம மக்கள் கலந்துகொண்டு சுவிசேஷ நற்செய்தியைக் கேட்டுள்ளனர். ஜெபத்தினால் சுரேஷ் அறுவை சிகிச்சையின்மூலம் சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும், கரிமா நெஞ்சுவலியிலிருந்தும் பூரண சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி உடல்நலக் குறைவினால் பாதிக்கப்படும் டோனாவூரில் படித்துக்கொண்டிருக்கும் நமது ஊழியரின் பிள்ளைகளுக்காக; முதுகு வலியினால் அதிகம் கஷ்டப்பட்டுவரும் 13 வயதான பிரியங்காவிற்காக; லக்ஷ்மம்மாவின் மகளுக்கும், மகனுக்கும் நல்ல வேலைவாய்ப்புகள் கிடைக்க; ஹிரப்பாவும், நாகம்மாவும் சண்டை சச்சரவுகளின்றி சமாதானமாய் வாழ; நமது பஞ்சாரா இன விசுவாசிகள் ஆலய ஆராதனையில் பங்கேற்றால், அவர்களது ரேஷன் பொருட்களின் விநியோகம் தடைசெய்யப்படும் என்று அச்சுறுத்தப்படும் அந்த பயத்திற்கு அவர்கள் நீங்கலாகி நிற்க; முதுகுத்தண்டுவட எலும்புமுறிவு பாதிப்பிலிருந்து பிரவீனும், நெஞ்சுவலியிலிருந்து பிரவீதியும் விரைவில் சுகமடைய ஜெபிப்போம்.

## 27 பிப்ரவரி திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நியாங் கான் மன் உம் பியாக் லால்
திருமதி. அனிதா ஷிஷுபால்

# தெலங்கானா

## அசிஃபாபாத்:

**வசாவா ரமேஷ்பாய் & சுனிதாபேன்**

**துதிக்க:** வேதாகம நற்செய்தி 960 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 2 விசுவாசிகள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். ஒரு வேதாகமமும், 12 புதிய ஏற்பாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. 3 கிராமங்களில் இரவுநேர ஜெபக்கூடுகைகளும், 8 கிராமங்களில் ஊழியப்பின்தொடர் பணிகளும், ஓரிடத்தில் பெண்கள் முகாமும் நேர்த்தியாக நடந்து முடிந்துள்ளன. 14 வேதாகம வகுப்புக்குழுவினர் கிரமமாகக் கூடி வேத வசனங்களைச் சிறப்புடன் கற்று வருகின்றனர். மார்க்ககொட்டா பகுதியில் பஜன் ஊழிய நிகழ்ச்சிகள் நல்லமுறையில் நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பர்தி இனமக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர; கௌதகுடா பகுதி மக்கள் இரட்சிப்படைய; பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; கோண்ட் மற்றும் நியூ போதி சமுதாய மக்கள் அவர்களுக்கிருக்கும் தடைகளைத் தாண்டி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; சுனில் குமார் இடதுகண் பார்வை கோளாறிலிருந்தும், விஜயபாய் ஒருபக்க சரீர வலியிலிருந்தும் பூரண சுகமடைய ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

## தாமலச்செருவு:

**ஜாண் டேவிட்ராஜ் & ஞானசேகரி;**
**அனில் மஹாலி &**
**டிகுமார்தி பிரசாந்தி**

**துதிக்க:** இரவனைகாரிபள்ளி, கொடுகசிந்தா, ராமாபுரம், கோத்தூர் மற்றும் தாமலச்செருவு ஆலயங்களில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதில் ஏறத்தாழ 450 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர்; அதன்மூலம் நமக்குப் புதிய தொடர்பாளர்களும் கிடைத்துள்ளனர். பொறியாளரான சைமன்ராஜ் சிவா தனது விசுவாசப் பின்னடைவிலிருந்து மீண்டும் விசுவாச வாழ்விற்குள் குடும்பமாக வந்துள்ளார். சரகம்மா சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும், அன்னபூரணம்மா தீய ஆவியின் கட்டிலிருந்தும், ராமமூர்த்தி குடிப்பழக்கத்திலிருந்தும் சுகவிடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரகசிய கிறிஸ்தவ குடும்ப அங்கத்தினரான லாவண்யா, நமது விசுவாசியின் மகன் மோகன்னா, ஜோதியின் கணவர் ஆகியோர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; நாதமுனி, சுமன், ஏகாம்பரம் குடிப்பழக்கத்திலிருந்து மீள; மெர்ஸி ஜெயலதா மற்றும் தீமோத்தேயு மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; சபைச்செயல்பாடுகளில் ஈடுபட ரவிக்கு வி. கொட்டாவிலிருந்து இரலா என்ற இடத்திற்கு பணிமாற்றம் கிடைக்க; பிரபாகர் பக்கவாதத்திலிருந்தும், யோபு பிரசாத் விபத்தினாலுண்டான காயத்திலிருந்தும், முனியம்மா சுவாசப்பிரச்சினையிலிருந்தும் சுகம் பெற; நமது இளம் பெண் விசுவாசிகளுக்கு கர்த்தருக்குப் பயந்த நல்ல ஆண் விசுவாசிகள் வாழ்க்கைத் துணைகளாகக் கிடைக்க ஜெபிப்போம்.

**28 பிப்ரவரி** செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வினு P., திரு. சாமுவேல் J.
திருமதி. ஜரின் லெட்தென்மாங் ஹாவ்கிப்

## ரோதம்:

**தேபதத்தா லிமா & சோனியா ராணி**

**துதிக்க:** புதிதாக 700 பேருக்கு சுவிசேஷ வசனம் சென்றடைந்துள்ளது. 30 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. கோவிந்தப்பா கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் தனது பொருளாதார நிலையில் உயர்ந்துள்ளார். கிறிஸ்துமஸ் கீத பவனிகளும், நிகழ்ச்சிகளும் தங்குத்தடையின்றி நடைபெற்றுள்ளன. இந்திராணி தனது முதல்மாதச் சம்பளத்தை ஆலயத்தில் காணிக்கையாகப் படைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தள கிராமத்தில் தேவனைக் கூடி ஆராதிக்க வாடகை அறையொன்று கண்டுப்பிடிக்கப்பட; அருணா, அம்ருதா, அனிதா, காயத்ரி மற்றும் சுனிதாவிற்கு நல்ல வாழ்க்கைத்துணைகள் அமைய; சானிப்பள்ளி கிராம காயத்ரி மற்றும் தாமோதரின் குடும்பம் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக அறிந்துகொள்ள; ராமன்ஜி மற்றும் நாகபூஷன் குடிப்பழக்கத்திலிருந்து விடுபடவும், தங்களது குடும்பத்தினரை ஆலய ஆராதனைகளுக்கும் ஜெபங்களுக்கும் செல்ல அனுமதிக்கவும்; இப்பணித்தள வாலிபர்கள் ஊழியச்செயல்பாடுகளில் உற்சாகமாக ஈடுபட ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

## செங்கம்:

**K.S. ஜாஷ்வா**

**துதிக்க:** சபை மூப்பர்களுக்கான பயிற்சிகள் கிரமமாகக் கொடுக்கப்பட்டு வருகின்றன; அதில் 3 நிலை வகுப்புகள் நிறைவு பெற்றிருக்கின்றன. 32 திருச்சபைகளைச் சார்ந்த மூப்பர்கள் இதன்மூலம் தங்களது சபைகளைச் சீராகப் பராமரிக்க பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்றனர். நமது சுதேச ஊழியர்களுக்கு TAFTEE வகுப்புகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதோடு, அவர்களின் ஆவிக்குரிய வாழ்வின் பிரயோஜனத்திற்காக உபவாச கூடுகையொன்றும் நடத்தப்பட்டுள்ளது. பிராந்திய சபை கவுன்சில் ஊழியத்திற்கான பத்திரிக்கையொன்று தயாரிக்கப்பட்டு, அனுப்பப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோவிந்த் சாமி குடிப் பழக்கத்தை விட்டுவிட்டு தனது வாழ்வை கிறிஸ்துவுக்கென அர்ப் பணிக்கவும், தனது இரு சகோதரரை இழந்து ஆறுதலில்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் அவரது மனைவிக்கு தேவ ஆறுதல் கிடைக்கவும்; குடிப் பழக்கத்தினால் தனது குடும்பத் தினரால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் அன்பு மனந்திரும்பி, தன் குடும்பத் தாருடன் சேர்ந்து வாழ; நமது சபை மூப்பரான சேட்டுவிற்கு நல்ல வாழ்க்கைத் துணையமைய; வாய்ப் பேச முடியாமலிருக்கும் செல்வராஜின் பேரன் அற்புத சுகமடைய ஜெபிப்போம்.

## 382 மிஷனரி ஆல்பம்



# திரு. பரணிதரன் & திருமதி. செல்வராணி குடும்பம்

தமிழ்நாடு, திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் வாழ்ந்த ஓவியர் திரு. சுப்பிரமணி & திருமதி. திலகவதி அவர்களுக்கு மூத்த மகனாக 25.07.1981-ல் சகோ. பரணிதரன் பிறந்தார். இவருக்கு, தான் ஒரு ஓவியக்கலைஞனாக வேண்டும் என்பது இலட்சியம். +2 முடித்து இவரது இலட்சியப்பயணம் தொடங்கும் முன்பே இவரது தகப்பனார் திடீர் மாரடைப்பால் இறந்துபோனதால், குடும்ப பாரம் இவரை அழுத்த ஆரம்பித்தது. தொழில் செய்ய ஆரம்பித்தார். ஆனால், தொழிலில் நஷ்டம் ஏற்பட்டது. எனவே, நம்பிக்கை இழந்து தற்கொலை செய்துகொள்ள இவர் இரயில் தண்டவாளத்தை நோக்கி நடந்தார். வழியில் எதிர்பாராதவிதமாக தேவகிருபையால் இவருடைய நண்பரொருவர் குறுக்கிட்டு, இவருக்கு இயேசுவின் அன்பை அறிவித்தார். இயேசுவை ஏற்றுக்கொண்ட இவர், தரங்கம்பாடியில் நடந்த சீகன்பால்க் 300-வது ஆண்டுவிழாவிற்கு பங்கேற்கச் சென்ற சுவிசேஷ ரத ஊழியத்தில் பணிசெய்யும் ஓவியர். நவநீதர் அண்ணனுக்கு உதவியாக அவருடன் அழைத்துச் செல்லப்பட்டார். பின்பு நவநீதர் அண்ணன் இவரை ஆவிக்குரிய வாழ்க்கையில் தொடர்ந்து வழிநடத்தினார். மிஷனரிகளின் வரலாற்று சரிதைகளை நாடகங்களின் மூலம் கண்டறிந்த இவர், வட இந்தியா செல்ல தன்னை அர்ப்பணித்து, 2008-ம் ஆண்டு நமது ஊழியத்தில் இணைந்தார்.

பின்னர் ஜார்க்கண்டிலுள்ள மால்தோ இனமக்கள் மத்தியில் 2002-ம் ஆண்டு முதல் 2009-ம் ஆண்டு வரை பணிபுரிந்துவந்த சகோதரி. செல்வராணியை சகோ. பரணிதரன் 26.06.2009-ல் தேவசித்தப்படி திருமணம் செய்து கொண்டார். இச்சகோதரி, தூத்துக்குடியைச் சார்ந்த திரு. வேத மாணிக்கம் & திருமதி. தமிழரசி என்ற கிறிஸ்தவத் தம்பதியருக்கு 2-வது மகளாக 21.07.1984-ல் பிறந்தவர். இவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, 2000-ம் ஆண்டில் கோயம்புத்தூரில் வைத்து நடைபெற்ற மாநில முகாமில் தன்னை மிஷனரிப்பணிக்கென ஒப்புக்கொடுத்தவர். பின்பு 2002-ம் ஆண்டு DMLT படிப்பை முடித்து, FMPB நேர்க்காணலில் கலந்துகொண்டு, நேரடியாக ஜார்க்கண்டிற்கு அனுப்பப்பட்டார். அதன்பின் 2003-ம் ஆண்டு உத்தரப்பிரதேசம், ஜான்சியிலுள்ள நமது மிஷனரிப்பயிற்சி மையத்தில் பயிற்சிக்காகச் சென்றார். மீண்டும் 2004-ம் ஆண்டு முதல் 2009-ம் ஆண்டு வரை மால்தோ இனமக்கள் மத்தியில் ஊழியம் செய்தார்.

திருமணத்திற்குப் பிறகு, திரு. பரணிதரன் தனது மிஷனரிப்பயிற்சியை மேற்கொள்ளும்படி 2009-ம் ஆண்டு முதல் 2010-ம் ஆண்டு நவம்பர் வரை ஜான்சியிலுள்ள நமது பயிற்சி மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். பின்பு அவர்கள் 2010-ம் ஆண்டு நவம்பர் மாதம் மகாராஷ்டிரா மாநில கோதாவரி பிராந்தியத்திற்கு சென்று 2 வருடங்கள் பணி செய்தனர். பிறகு 5 வருடங்கள் சென்னையிலுள்ள சுவிசேஷ ரத ஊழியத்தில் பணிசெய்து, மீண்டும் 2017-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் 6 மாதங்கள் மகாராஷ்டிராவிலுள்ள கான்தேஷ் பிராந்திய தடுகோன் பணித்தளத்திலும், பிறகு அவ்வருட ஜுலை மாதத்திலிருந்து இந்நாள் வரை நர்மதா பணித்தளத்தில் தேவப்பணியைச் செய்து வருகின்றனர்.

இவர்களுக்கு தேவன் 2 பெண் பிள்ளைகளைக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். மூத்தமகள் மெர்ஸி (D.O.B. 02.11.2011) 6-ம் வகுப்பிலும், இளையமகள் ஆக்னஸ் (D.O.B. 28.08.2014) 3-ம் வகுப்பிலும் டோனாவூர்-சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இம்மிஷனரிக் குடும்பத்தை நமது அனுதின ஜெபத்தின் மூலம் தாங்குவோம்.

Regd. Newspaper for India No.17759/69

# நிதி அலுவலகத்திலிருந்து

**Online Banking**

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:** காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**

it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***